# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாதஇதழ்

Tamil Monthly


| மலர்: 01 | இதழ்: 06 | ஏப்ரல் 2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை |
|---|---|---|---|---|---|
| Volume: 01 | Issue: 06 | April 2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai |




## தமிழ்நாட்டின் சென்னையில் பல்வேறு திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்






## AI தொழில்நுட்பத்தை தேர்வு செய்து படிக்கலாமா?

## எதிர்காலம் எப்படி?

www.penakural.com



# பொது மக்களுடனான உரையாடல் சொற்பொழிவில் ஒரு முக்கியமான மைல்கல்...



## மனதின் குரல்

## 100வது அத்தியாயம்

**ஏப்ரல் 30, 2023**

'மன் கி பாத்' எனப்படும் மனதின் குரல் உரை நிகழ்ச்சி பொதுமக்களின் பங்களிப்பை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த தளமாக மாறியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் இந்த வானொலி நிகழ்ச்சி அதன் ஒளிபரப்பின் 100-வது அத்தியாயத்தை மிக விரைவில் கொண்டாடவுள்ளது. ஏப்ரல் 30, 2023 அன்று மனதின் குரலின் 100-வது அத்தியாயம் ஒலிபரப்பாகவுள்ள நிலையில் இந்த வரலாற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக நீங்களும் மாறத் தயாராகுங்கள். 1800-11-7800 என்ற எண்ணை டயல் செய்வதன் மூலமோ அல்லது https://www.mygov.in/group-issue/inviting-ideas-celebrate-100th-episode-mann-ki-baat / என்ற இணையதள இணைப்பின் மூலமோ உங்கள் ஆலோசனைகளைப் பகிர்வதன் மூலம் இந்த அத்தியாயத்தை மறக்கமுடியாததாக நீங்கள் மாற்றலாம்.



"என் அன்பான நாட்டு மக்களே, இப்போது நாம் 'மனதின் குரல்' உரை நிகழ்ச்சியின் 100-வது அத்தியாயம் என்ற மைல்கல்லை நோக்கி மெதுவாக நகர்ந்து வருகிறோம். நாட்டு மக்கள் பலரிடமிருந்து எனக்கு கடிதங்கள் வந்துள்ளன. அதில் அவர்கள் 100-வது அத்தியாயத்தைப் பற்றி மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். 100-வது அத்தியாயத்தில் நாம் எதைப் பற்றி பேச வேண்டும், அதை எப்படிச் சிறப்பாக்குவது என்பது தொடர்பான உங்கள் ஆலோசனைகளை எனக்கு அனுப்புவதை நான் விரும்புகிறேன்

**- நரேந்திர மோடி, பிரதமர்**

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

R.Dis. No.: 939/2022

மலர்: 01 இதழ்: 06 ஏப்ரல் 2023 விலை: ₹20/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : NV சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா S, B.E.,

நிர்வாக ஆசிரியர் : P. கார்த்திகேயன்

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின் B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், B.மணிகண்டன், A.தங்கராஜ், K.மாரிதுரை, M.திலிப் குமார், P.அசோக்குமார், P.ஜேசுராஜ், J.தனசேகர், K.சுபுலட்சுமி

நிருபர்கள் :
B.சரவணன், தமிழ் மணி, U.சரவணன், K.கலைமணி, D.பாமா, ஜெபசீலன், N.விஜயலட்சுமி, தமிழ் வீரன், A.ஐயப்பன், அன்பு மணி, R.பிரகாஷ், G.தீபக், V.கண்ணபிரான், தமிழினி, T.அஜி

புகைப்பட நிருபர்கள் :
V. கவியரசன், K. மிதுன் சாய்

ஓவியங்கள்: V. சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: RS Sun Printz

நிர்வாக அலுவலகம் :
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது. *




# மக்கள்தொகை பெருக்கம் நாட்டுக்கு நன்மை பயக்குமா அல்லது கெடுதலாகுமா?

ஐ.நா. மக்கள்தொகை நிதியத்தின் (யுஎன்எஃப்பிஏ) உலக மக்கள்தொகை அறிக்கை -2023 அண்மையில் வெளியானது. அதில் இந்தியா 142.86 கோடி மக்கள்தொகையுடன் முதலிடத்திலும், சீனா 142.57 கோடி மக்கள்தொகையுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளது தெரியவந்துள்ளது. கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள்தொகையில் சீனா முதலிடத்தில் இருந்துவந்தது. இந்திய மக்கள்தொகையில் 14 வயது வரை 25 சதவீதம் பேரும், 15 முதல் 64 வயது வரை 68 சதவீதம் பேரும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 சதவீதம் பேரும் இருப்பதும் தெரியவந்துள்ளது. மக்கள்தொகை பெருக்கம் நாட்டுக்கு நன்மை பயக்குமா அல்லது கெடுதலாகுமா என்ற பெரும் விவாதத்தை இந்தப் புள்ளிவிவரம் கிளப்பி உள்ளது.

நமது நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான உத்தர பிரதேசத்தின் மக்கள்தொகையையே கொண்ட பாகிஸ்தானும் (சுமார் 23.14 கோடி), தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் தோராயமாக மூன்றில் ஒரு பங்கையே கொண்ட இலங்கையும் (2.2 கோடி) பொருளாதார ரீதியாக மிகப் பெரும் பிரச்னையை எதிர்கொண்டுள்ளன. கரோனா பெருந்தொற்றின் பாதிப்பு, உக்ரைன் - ரஷியா இடையேயான போர் போன்றவற்றின் காரணமாக, தமிழ்நாட்டின் அளவுக்கு கூட மக்கள்தொகை இல்லாத பல நாடுகள் பொருளாதார ரீதியாக கடும் சவாலை எதிர்கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

இந்த சூழலில், இந்த ஆண்டு 112 மில்லியன் டன்னுக்கு அதிகமாக கோதுமை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பால் உற்பத்தியிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 183.96 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அமெரிக்காவைவிட 50 சதவீதமும், சீனாவைவிட 3 மடங்கும் அதிகமாகும். ரூ.2,928 கோடி மதிப்பிலான 1.08 லட்சம் டன் பால் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதுபோன்று பல துறைகளிலும் இந்தியா சாதனை படைத்து வரும் நிலையில், இந்த மக்கள்தொகை பெருக்கத்தை பாதகம் என்று கருதப்படும் அம்சம்கூட சாதகமானதாக மாற்றப்படலாம். வளர்ந்த தேசமாக இந்தியா மாற வேண்டுமெனில், சமூக -பொருளாதார, சுகாதார, அரசியல் சூழ்நிலைகள் அதற்கு சாதகமானதாக இருக்க வேண்டும். நாடு முழுவதும், கடுமையாக உழைக்கக்கூடிய பருவமான 15 முதல் 24 வயது வரை 25.4 கோடி பேர் உள்ளனர். இவர்கள் திறன் மேம்படுத்தப்பட்டால் உலகின் தொழில்கூடமாக இந்தியா மாற முடியும். தரமான கல்வி, இளைஞர்களின் திறன் மேம்பாடு, எளியோருக்கும் எட்டும் வகையில் சுகாதார கட்டமைப்புகள், வேலைவாய்ப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் திட்டமிட்டு செயல்பட வேண்டிய தருணம் இது. இதில் ஏதேனும் ஒரு விஷயத்தில் கோட்டை விட்டாலும் இந்த மக்கள்தொகை பெருக்கம் என்பது பெரும் தலைவலியாக மாறிவிடக்கூடும்.

– ராதிகா சிவசங்கர், ஆசிரியர்




# தமிழ்நாட்டின் சென்னையில் பல்வேறு திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்

சென்னை விமான நிலையத்தில் முதலமைச்சர் ஸ்டாலின், பிரதமர் மோடியை வரவேற்றார் அப்போது பரிசாக எழுத்தாளர் அ.ராமசாமி எழுதிய 'தமிழ்நாட்டில் காந்தி' என்ற புத்தகத்தின் "Gandhi's Travels in Tamilnadu" ஆங்கில பிரதியை வழங்கினார்.

தமிழ்நாட்டின் சென்னையில் அல்ஸ்தம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். முன்னதாக பிரதமர் சென்னை சர்வதேச விமானை நிலையத்தில் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடத்தின் பகுதி ஒன்றை திறந்துவைத்தார். சென்னை – கோவை வந்தே பாரத் அதிவிரைவு ரயிலை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

திட்டங்களைத் தொடங்கிவைத்த நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், தமிழ்நாடு, வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் தாயகமாகும், மொழி மற்றும் இலக்கியத்தின் பூமியாகும் என்று கூறினார். நமது விடுதலைப் போராட்ட வீரர்களில் பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவு கூர்ந்த பிரதமர், இந்த மாநிலம் தேசப்பற்று மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் மையமாக திகழ்கிறது என்று கூறினார். தமிழ்ப்புத்தாண்டு விரைவில் வரவிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், புதிய ஆற்றல், நம்பிக்கை, விருப்பங்கள் மற்றும் புதிய தொடக்கங்களுக்கான தருணம் இது



என்று கூறினார். "பல புதிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் இன்றிலிருந்து மக்களுக்கு பயன்படும் என்று கூறிய அவர், அவற்றில் சில அதன் தொடக்கங்களைக் கண்டுள்ளன" என்று கூறினார். ரயில்வே, சாலைகள், விமானப்போக்குவரத்துத் தொடர்பான புதிய திட்டங்கள் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கு புதிய உற்சாகத்தை அளிக்கும் என்று அவர் தெரிவித்தார். இந்தியா வேகமும், அளவும் கொண்ட உள்கட்டமைப்புப் புரட்சியைக் கண்டு வருகிறது என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த ஆண்டு பட்ஜெட்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரூ.10 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார். இது 2014–ஆம் ஆண்டு பட்ஜெட்டைவிட 5







மடங்கு அதிகம் என்று அவர் கூறினார். ரயில் உள்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு சாதனை அளவாகும் என்று அவர் தெரிவித்தார். வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், 2014–ஆம் ஆண்டு முதல் தேசிய நெடுஞ் சாலைகளின் தூரம், ரயில்வே மின்மயமாக்கல் ஆகியவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துள்ளன என்று கூறினார். மின்மயமாக்கல் 600 கிலோ மீட்டரிலிருந்து 4,000 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது போல, விமான நிலையங்களின் எண்ணிக்கையும் 74–லிருந்து சுமார் 150 ஆக அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரையைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், அது வர்த்தகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக திகழ்கிறது என்றார். 2014–ஆம் ஆண்டு முதல் துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறனும், இருமடங்காக அதிகரித்துள்ளது என்றார் அவர்.

நாட்டின் சமூக மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்புப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 2014–லில் 380–லிருந்து தற்போது 660–ஆக உயர்ந்துள்ளது என்றார். கடந்த 9 ஆண்டுகளில், நாட்டில் செயலிகளின் எண்ணிக்கை மும்மடங்காகி உள்ளது என்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் உலகின் முதல் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். உலகிலேயே குறைந்த விலையில், கைபேசி இணையசேவை வழங்கும் நாடாகவும் இந்தியா திகழ்கிறது. சுமார் 2 லட்சம் கிராம பஞ்சாயத்துக்களுக்கு 6 லட்சம் கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இன்று நகர்ப்புற பயனாளிகளைவிட கிராமங்களில் அதிக அளவில் இணையதள பயன்பாட்டை இந்தியா கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

பணிக்கலாச்சாரம் மற்றும் தொலைநோக்குப் பார்வையில் புகுத்திய மாற்றத்தின் பலனாக மாபெரும் மாற்றங்களை பரிசாக பெற்றுள்ளோம் என்று கூறினார். உள்கட்டமைப்பு திட்டங்கள் என்பது காலதாமதம் என்றில்லாமல், விரைவான நடைமுறையாக மாறியிருப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர், இதற்கு பணிக் கலாச்சாரத்தில் மேற்கொண்ட மாற்றமே காரணம் என்றார். வரி செலுத்துவோரின் ஒவ்வொரு ரூபாய்க்கும் பதில் சொல்ல வேண்டியதைக் கவனத்தில் கொண்டு, பணியாற்றினால் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் இலக்கை அடைய முடியும் என்று தெரிவித்தார். முந்தைய அரசுகளின் கண்ணோட்டங்களை ஒப்பிட்டுப் பேசிய பிரதமர், உள்கட்டமைப்பு வசதிகள் என்பதை வெறும் சிமெண்ட், செங்கல் என்ற கோணத்தில் பார்க்காமல், மனிதகுலத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதோடு, கனவுகளை நிறைவேற்றுவதாகக் கருதவேண்டும் என்றார்.

தொடங்கிவைக்கப்பட்ட திட்டங்களை உதாரணம் காட்டி பேசிய அவர், விருதுநகர் மற்றும் தென்காசி பருத்தி விவசாயிகளை மற்ற சந்தைகளுடன் இணைக்கும் சாலைத்திட்டங்கள், சென்னை– கோவை இடையேயான வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்சேவை நுகர்வோருக்கான சிறிய தொழில்களை இணைக்கும் பாலமாக திகழ்வதுடன், சென்னை விமான நிலையத்தின் புதிய முனையம், உலக நாடுகளை தமிழ்நாட்டுக்கு நெருங்கி வர செய்வதாக பட்டியலிட்டார். இந்தத் திட்டங்கள், இங்குள்ள இளைஞர்களுக்கான புதிய

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான முதலீடுகளை ஈர்க்கும் என்றும் தெரிவித்தார். வாகனங்கள் வேகம் பெறுவதுடன், மக்களின் கனவுகளை நிறைவேற்றும் செயல்களும் வேகம் பெறுவதாகவும், இதன் மூலம் பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்றும் கூறினார். இந்த உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஒவ்வொன்றும் கோடிக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் கூறினார்.

மத்திய அரசை பொருத்தவரை தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்கு பிரதான முக்கியத்தும் அளிக்கப்படுவதாக கூறிய அவர், இந்த ஆண்டு பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் ரயில்வே உள்கட்டமைப்பு வசதிகளுக்காக முன்னெப்போதும் இல்லாத வகையில், ரூ.6,000 கோடிக்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதையும் சுட்டிக்காட்டினார். கடந்த 2009–ம் ஆண்டு முதல் 2014–ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் ரயில்வே உள்கட்டமைப்புக்கு ரூ.900 கோடிக்கும் குறைவான தொகை சராசரியாக ஒதுக்கப்பட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். அதே நேரத்தில் 2004–ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை, தமிழ்நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளின் தூரம் 800 கிலோ மீட்டராக இருந்தாகவும், இந்த தூரம் 2014–ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை யிலான காலகட்டத்தில் சுமார் 2 ஆயிரம் கிலோமீட்டராக மாற்றியமைக்கப்பட்டு இருப்பதையும் நினைவு கூர்ந்தார். மேலும் கடந்த 2014–15–ம் நிதியாண்டு ரூ.1,200 கோடி அளவுக்கு செலவிடப்பட்ட தமிழ்நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கான முதலீடு, 2022–23–ம் நிதியாண்டில் 6 மடங்காக அதிகரித்து ரூ.8,200 கோடியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு பல்வேறு முக்கியத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருப்பதை நினைவுகூர்ந்த அவர், இந்தியாவின் பாதுகாப்பை பலப்படுத்தும் பாதுகாப்பு தொழில் வழித்தடம், பிஎம் மித்ரா ஜவுளி மெகா தொழில் பூங்காக்கள், பெங்களூரு–சென்னை விரைவுச் சாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது ஆகியவற்றை இதற்கான உதாரணங்களாகப் பட்டியலிட்டார். சென்னை அருகே பன்முனைய தளவாட பூங்கா, பாரத்மாலா திட்டத்தின் கீழ், மாமல்லபுரம் முதல் கன்னியாகுமரி வரையிலான ஒட்டுமொத்த கிழக்கு கடற்கரை சாலைப்பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

தொடங்கிவைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மூலம் சென்னை, மதுரை, கோவை ஆகிய மூன்று முக்கிய நகரங்கள் நேரடியாக பலன்பெறும் என்று குறிப்பிட்ட பிரதமர், சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கிவைக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடம், அதிகரித்து வரும் விமான பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் என்று தெரிவித்தார். இந்த முனையத்தின் வடிவமைப்பு தமிழ் கலாச்சாரத்தின் எழிலை பிரதிப்பலிப்பதாகவும், அதன் மேற்கூரை, தரைதளம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள சுவரோவியங்கள், தமிழ்நாட்டை பல கோணங்களில் சித்தரிப்பதாகவும் கூறினார். மேலும் தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை பறைசாற்றும் விமான நிலையம், நவீன காலத்தின் தேவைக்கேற்றப்படி கட்டுப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத பொருட்கள், பசுமை தொழில் நுட்பத்தை உள்ளடக்கிய எல்இடி, சூரிய மின்சக்தி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருப்பதாகவும் தெரிவித்தார். இன்று கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்ட சென்னை– கோவை வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்சேவை, சுதேசி இயக்கத்தை வலியுறுத்திய கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரம் பிள்ளை அவதரித்த மண்ணின் இந்திய தயாரிப்பிற்கான கௌரவமாகத் திகழ்வதாகவும் திரு பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

ஜவுளித்துறையாகட்டும், குறு, சிறு, நடுத்தர தொழில் துறை நிறுவனங்களாகட்டும் கோயம்புத்தூர் தொழில்துறையின் ஆற்றல் சக்தியாக விளங்குகிறது. தற்போதைய நவீன இணைப்பு வசதிகள் அப்பகுதி மக்களின் உற்பத்தி திறனை அதிகரிக்கிறது. வந்தே பாரத் விரைவு ரயில் சேவை வாயிலாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் இடையேயான பயண நேரம் ஆறு மணி நேரம் மட்டுமே. சேலம், ஈரோடு, திருப்பூர் போன்ற தொழில்துறையின் மையங்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனளிக்கும். மதுரையை மேற்கோள் காட்டிய பிரதமர், தமிழ்நாட்டில் கலாச்சார தலைநகராகவும், உலகின் மிகத் தொன்மையான நகரங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது என்றார்.

இன்றைய திட்டங்கள், தொன்மையான நகரத்தின் நவீன உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உதவும்.

இறுதியாக இந்தியாவின் வளர்ச்சி இயந்திரத்திற்கு தமிழ்நாடும் முக்கியப் பங்காற்றுகிறது. உயர்தர உள்கட்டமைப்பு வசதிகள் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, வருவாய் அதிகரிப்பதன் மூலம், தமிழ்நாடு வளர்கிறது. தமிழ்நாடு வளரும்போது இந்தியாவும் வளரும் என்று பிரதமர் கூறினார்.

தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய இரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், மத்திய விமானப் போக்குவரத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், தகவல், ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு மற்றும் தமிழ்நாட்டு மாநில அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் ரூ. 3,700 கோடி மதிப்பீட்டிலான சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைத்து மற்றும் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மதுரை நகரில் 7.3 கிலோமீட்டர் நீளத்திற்கு உயர்மட்டச் சாலையையும், தேசிய நெடுஞ்சாலை 785–ன் 24.4 கிலோமீட்டர் நீளமுள்ள நான்கு வழிச்சாலையையும் பிரதமர் தொடங்கி வைத்தார். தேசிய நெடுஞ்சாலை – 744–ன் சாலைத் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். ரூ.2400, கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் தமிழ்நாடு மற்றும் கேரளா இடையே இணைப்பை அதிகப்படுத்தும். மேலும், மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஆண்டாள் கோவில் மற்றும் கேரளாவிலுள்ள சபரிமலை ஆகியவற்றிற்கு செல்லும் யாத்ரீகர்களுக்கு சௌகரியமான பயணத்தை உறுதிப்படுத்தும்.

ரூ.294 கோடி மதிப்பீட்டில் திருத்துறைப்பூண்டி மற்றும் அகஸ்தியம்பள்ளி இடையேயான 37 கிலோமீட்டர் நீளத்திற்கான இரயில் பாதை மற்றும் பணிகளையும் பிரதமர் தொடங்கி வைத்தார். இதன் மூலம் சமையல் மற்றும் தொழில்துறைக்குப் பயன்படுத்தும் உப்பை நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அகஸ்தியம்பள்ளியிலிருந்து கொண்டுவரும் வகையில் பயனளிக்கும்.

தாம்பரம் மற்றும் செங்கோட்டை இடையே எக்ஸ்பிரஸ் இரயில் சேவையை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். திருத்துறைப்பூண்டி – அகஸ்தியம்பள்ளி இடையே இரயில் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதன் மூலம் கோயம்புத்தூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த இரயில் பயணிகள் பயனடைவர்.



நீலகிரி மாவட்டம், முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமில் பராமரிக்கப்படும், தாயை பிரிந்த இரண்டு யானை குட்டிகளும், அவற்றின் பராமரித்த பழங்குடி தம்பதிகளுக்கு இடையேயான பாச உறவை, மையமாக வைத்து, ஊட்டியை சேர்ந்த கார்த்திகி கனசால்வஸ் என்ற பெண் இயக்குனர் எடுத்த ஆவண படத்துக்கு, நடப்பு ஆண்டு சிறந்த ஆவண படத்திற்கான 'ஆஸ்கார்' விருது கிடைத்தது.

இதன் மூலம், யானை குட்டிகள் ரகு, பொம்மி மற்றும் பாகன் தம்பதிகள் பொம்மன் பெள்ளி புகழ் பெற்றுள்ளனர். அவர்களை பலரும் பாராட்டி வருகின்றனர். 9ம் தேதி, பிரதமர் மோடி, முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமுக்கு நேரில் வந்து, யானை குட்டிகளை பார்த்ததுடன், யானை பாகன் பொம்மன் பெள்ளி தம்பதிகளை நேரில் சந்தித்து, பாராட்டி சென்றார்.

– S. **ராதிகா**



# AI தொழில்நுட்பத்தை தேர்வு செய்து படிக்கலாமா?

# எதிர்காலம் எப்படி?

இந்தியா முழுவதும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு பெரும்பாலும் முடிவடைந்த நிலையில், உயர்கல்வியில் எந்த படிப்பில் சேரலாம் என பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் விவாதித்து வருகின்றனர். இந்தியாவில் கலை, அறிவியல் படிப்புகளுக்கு அடுத்து பொறியியல் படிப்புகளில் சேர அதிக மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் ஒரு டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆவதை விரும்புகிறார்கள்.

அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பொறி யியல் துறையில் உயர்கல்வி பயில வேண்டும் என்று பல மாணவர்கள் விரும்புகின்றனர். குறிப்பாக பொறியியல் படிப்புகளில் AI, Machine Learning, Quantum computing போன்ற துறைகளை தேர்வு செய்து படிக்க மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த படிப்புகளை எங்கு படிக்கலாம், படித்த பிறகு எந்த துறைகளில் வேலைக்குச் செல்ல முடியும் என கல்வியாளர்கள் வழிகாட்டுகின்றனர்.

AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) என்பது மென்பொருள் துறையின் ஒரு நீட்சியாகும். இதை முழுநேர பாடமாக எடுத்துப் படிக்க இதை வழங்கும் ஏதாவது ஒரு பொறியியல் கல்லூரியில் இளங்கலை (B.E, B.Tech) அல்லது முதுகலை (M.E,M.Tech) படிப்பில் சேர வேண்டும். இளங்கலை படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள், பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். IIT, NIT போன்ற நிறுவனங்களில் Artificial Intelligence சார்ந்த B.Tech படிப்புகளில் சேர அந்த கல்லூரிகளுக்காக நடத்தப்படும் நுழைவுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும். தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க, பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் நடக்கும் ஆன்லைன் கலந்தாய்வின் மூலமாக இந்த படிப்புகளில் சேர முடியும்.

முதுகலை படிப்பில் Artificial Intelligence துறையை தேர்வு செய்து படிக்க வேண்டுமென்றால், கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இளங்கலை (B.E, B.Tech) பட்டம் முடித்திருக்க வேண்டும். சில கல்லூரிகளில் ணிணிணி, ணிசிணி போன்ற பிற துறைகளை சார்ந்த மாணவர்களும் முதுகலை படிப்பில் சேர அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் தேர்வு செய்யும் கல்லூரியின்

இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகுதியை பார்த்து இதை முடிவு செய்து கொள்ள வேண்டும்.

Artificial Intelligence துறையில் B.E, B.Tech படிக்க விரும்பும் மாணவர்களுக்கு, இந்தியாவில் உள்ள பல கல்லூரிகள் இந்த படிப்பை வழங்குகின்றன. இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களான IIT, NIT போன்ற கல்லூரிகளில் AI, Machine Learning, Data Science தொடர்பாக இளங்கலை, முதுகலை, பட்டயப்படிப்புகள் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள பல தன்னாட்சி (autonomous) பெற்றக் கல்லூரிகள், தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் AI தொடர்பான படிப்புகள் வழங்கப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் ஒரு சில கல்லூரிகளில் மட்டுமே B.E, B.Tech படிப்புகளில் AI தொடர்பான பாடங்களை வழங்குகின்றன. ஆனால், அண்ணா பல்கலைக்கழகம் உட்பட பல கல்லூரிகளில் முதுகலை படிப்புகளில் AI, Machine Learning, Data Science சார்ந்த பிரிவுகள் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகம் உட்பட அதன் 450க்கும் மேற்பட்ட உறுப்பு கல்லூரிகளில், B.E, B.Tech படிப்புகளின் அனைத்து பிரிவுகளிலும் AI, Machine Learning, Big Data சார்ந்து 3 பாடங்கள் வைக்கப்பட்டுள்ளன என்று அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் வேல்ராஜ் கூறினார்.

"கம்ப்யூட்டர் சயின்ஸ், தகவல் தொழில்நுட்பம் பிரிவுகள் மட்டுமல்லாது, மெக்கானிக்கால், சிவில் என பல துறைகளிலும் AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படையை கற்றுக் கொடுக்கும் நோக்கில், 2021ஆம் ஆண்டு முதல் AI, Machine Learning, Big Data சார்ந்து 3 பாடங்கள் வைக்கப்பட்டுள்ளன," என்று அவர் கூறினார்.

AI போன்ற துறைகளில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஈடு செய்யும் விதத்தில் பாடத்திடங்களை வகுக்க, ஐ.டி துறையில் சிறப்பாக செயல்படும் நபர்களின் ஆலோசனைகளை பெற்று அண்ணா பல்கலைக்கழகத்தில் பாடத்திடங்கள் உருவாக்கப்படுகின்றன என்று வேல்ராஜ் தெரிவித்தார்.


தற்போதைய நவீன உலகின் மாற்றங்களை பார்க்கும் போது அடுத்து வரும் 5 முதல் 10 ஆண்டுகளுக்கு AI, Machine Learning, Data Science போன்ற படிப்புகளை தேர்வு செய்யும் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் அமையும் என்று உயர்கல்வி ஆலோசகர் மாணிக்கம் தெரிவித்தார். "தானியங்கி கார்கள், பெர்சனல் ரோபாட், Augmented Reality, Virtual Reality போன்ற மெய்நிகர் தொழில்நுட்பம் என தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உச்சத்தில் இருக்கிறது. இதனுடன் 5G,6G இணைய வேகம் சேர்ந்தால், மனித குலம் புதிதாக பரிணமிக்கும். இதற்கு செயல்வடிவம் கொடுப்பதில், Quantum computing, AI, Machine Learning போன்ற தொழில்நுட்பங்கள் முக்கிய பங்கு வகிக்கும். அதனால் மாணவர்கள் இந்த துறையை தேர்வு செய்து படிப்பது நல்ல முடிவு," என்றார்.

ஜெர்மனியில் உள்ள டெஸ்லா நிறுவனத்தில் மூத்த மென்பொருள் பொறியாளராக பணியாற்றி வரும் தினேஷ்கார்த்திக், AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்னும் தொடக்க நிலையில் மட்டுமே இருக்கிறது. இந்த துறை இன்னும் முதிர்ச்சி அடைய அதிக காலம் ஆகும் என தெரிவித்தார்.

"இன்னும் பல நிறுவனங்கள் AI சார்ந்த தொழில்நுட்பத்தை தங்கள் நிறுவனங்களில் தகவமைத்துக் கொள்ளவில்லை. அதனால் இன்றைய காலக்கட்டத்தில் AI துறைக்கான வேலை சற்றுக் குறைவாக மட்டுமே கிடைக்கிறது. அதனால் இந்த துறை வளர்ச்சி அடைந்த பிறகு வேலைவாய்ப்புகள் விரிவடையும்," என்று தெரிவித்தார்.

Artificial Intelligence துறையின் வளர்ச்சி இன்னும் இந்தியாவில் முழுமையாக வரவில்லை என்கிறார் உயர்கல்வி ஆலோசகர் மாணிக்கம். "வெளிநாடுகளை ஒப்பிட்டால் இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் 90% கல்லூரிகளுக்கு AI சார்ந்த படிப்புகளை மாணவர்களுக்கு வழங்கும் அளவுக்கு உட்கட்டமைப்பு வசதிகள், அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள் இல்லை. ஐஐடி போன்ற சில அரசு நிறுவனங்கள் மற்றும் சில தனியார் கல்லூரிகளில் மட்டுமே உலகத் தரத்திலான வசதிகள் இருக்கிறது. அதனால் இந்தியாவில் ஏதாவது ஒரு கல்லூரியில் B.E (CSE, IT) படித்துவிட்டு அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களுக்கு சென்று முதுகலை படிக்கலாம்," என்று பேராசிரியர் மாணிக்கம் தெரிவித்தார்.

– B. **நவீன்குமார்**





# ராஜா எறும்பு ராஜா தேனீ என்று ஏன் இல்லை?

எறும்பு, குளவி, தேனீ இவற்றையெல்லாம் நாம் சமுதாயப் பூச்சிகள் என கூறுகிறோம். காரணம் அவற்றிற்கென கட்டமைப்புகள், படிநிலைகள் கொண்டு வாழ்கின்றன. ஒரு குளவி (அ) தேனீ (அ) எறும்பு கூட்டில் மூன்று வகையான உறுப்பினர்களைப் பார்க்கலாம்.




முதலில் ராணி, அடுத்து ஆண், அடுத்து வேலைக்கார பூச்சிகள். எறும்புகளில் இராணுவ எறும்பு எனும் பிரிவு உண்டு. முதலில் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டை உணர்த்தும் படத்தினைக் கீழே காணுங்கள்.




தேனீக்களின் அளவு வேறுபாடு (வேலைக்கார தேனீ, ஆண் தேனீ, இராணி தேனீ

எறும்புகளின் உருவளவு வேறுபாடு(இராணி எறும்பு, ஆண் எறும்பு, வேலைக்கார எறும்பு, இராணுவ எறும்பு)

**இராணி:**

இவற்றில் இராணி தேனீ/எறும்பின் வேலை தலைமைப்பொறுப்பு, உத்தரவிடுதல், ஆண் பூச்சியுடன் இணைந்து இனப்பெருக்கம் மேற்கொண்டு புதிய காலனியை உருவாக்குவது.

**ஆண் பூச்சி:**


அடுத்த நிலையில் இருப்பது ஆண் பூச்சிகள். இவற்றின் முக்கிய வேலையே இனச்சேர்க்கை மட்டுந்தான். இராணியுடன் இணைந்து உயிரைத் தோற்றுவிப்பதை மட்டுமே வேலையாக செய்துவருகிறது.

**வேலைக்கார பூச்சிகள்:**

அடுத்த நிலை வேலைக்கார பூச்சிகள். இவற்றின் வேலை உணவு தேடுதல், சேகரித்தல், கூட்டிலுள்ள லார்வாக்களுக்கு உணவளிப்பது, லார்வாக்களை பராமரிப்பது போன்றவை. இவை மலட்டுத்தன்மை உடைய பெண் பூச்சிகள்.

**இராணுவ எறும்பு:**

எறும்புகளிலும் வேலைக்கார எறும்புகளுக்கு இதே வேலைதான். ஆனால் இராணுவ எறும்பு என்று ஒரு கூட்டம் உண்டு. இவை தான் இராணிக்கும், புற்றுக்கும் பாதுகாப்பு. மேலும் இராணியின் கட்டளைகளை செயல்படுத்துபவையும் இவை தான். மேலுள்ள படத்தில் இவற்றின் உருவளவு வேறுபாட்டினைப் பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். முக்கிய குறிப்பு இவையனைத்தும் பெண்கள்.




**இராணி தேனி, இராணி எறும்பெல்லாம் இருக்கு. அப்ப ராஜா தேனீ இல்லன்னா ராஜா எறும்பு இருக்கனும்ல?**

வாஸ்தவமான கேள்வி தான். ஆனா ராஜா தான் செத்துட்டாரே... பின்ன எப்படி.

ராஜா என் இறந்தார்னு பாப்போமா!

பெரும்பாலான எறும்பு, கரையான் மற்றும் சில தேனீ இனங்களின் இனப்பெருக்கத்தில் Nuptial Flight ஒரு முக்கியமான கட்டமாகும்.




இந்த பறத்தலின் போது, இராணிகள் ஆண்களுடன் இணைகின்றன. இதற்காக இராணியானது உயரமான பறத்தலைத் தொடங்கும் இதைக் கவனிக்கும் ஆண்கள் சரியான நேரம் இதுதான் என இராணியுடன் இணைய பின்னாலே தொடர்ந்து பறக்கும். இறுதிவரை இராணியைத் தொடர்ந்து உயரே செல்லும் பலமிக்க ஆணைத்தான் ஜோடியாக ஏற்றுக்கொள்ளும். வானிலேயே இனப்பெருக்கம் முடிந்து ஆண் கீழே விழுந்து இறந்துவிடும்.

புரியுதாப்பா ராஜா செத்துட்டார்.. அப்புறம் எப்படி கூட்டுக்குள்ள இராணியோட சிம்மாசனத்துல பக்கத்துல உக்காந்து ஆட்சி பண்றது...

இராணி பூச்சிகளால இடப்படும் முட்டைகள்ல இருந்து வர்ற ஆண்கள் (இளவரசர்கள்) இனப்பெருக்க பருவம் வந்ததும் அதுங்க பொதுவா கூடுற இடத்துல சந்திக்கும். அந்த நேரத்துல தான் இராணி, தான் தயார், யாரு போட்டிக்கு வர்றீங்கன்னு ஒரு சவுண்டு விட்டுட்டு பறக்க தொடங்கும். உடனே நம்ம இளவரசர்களெல்லாம் இராஜாவாகுறதுக்காக போட்டி போட்டு முன்னேறி இராஜா ஸ்தானத்துக்கு போறதுக்கு முன்னாடியே இராணிகூட சேர்ந்ததும் இறந்துடும்.

இந்த நேரத்துல இராணி தேனீ 20லிருந்து 40 ஆண்கள் கூட இணை சேரும்.

Nuptial Flight முடிஞ்சதும் இராணி புது காலனிய உருவாக்க வேற இடம்பாத்து போயிடும். இந்த நேரத்துல தேனீ இனத்துல பழைய கூட்டுல இருந்து கொஞ்சம் வேலைக்கார தேனீக்கள் மட்டும் இராணி கூட போகும். இராணி இல்லாம பழைய கூடு அழிஞ்சிடும். அழிவு உடனடியா இருக்காது. புதிய பூச்சிகளின் சேர்க்கை இல்லாம, பழைய பூச்சிகளின் வாழ்நாளோட பழைய கூடு முடிவு நிலைக்கு வரும்.

எறும்போட இனச்சேர்க்கை தேனீயிலருந்து வேறுபட்டதல்ல. தேனீ மாதிரியே தான் எறும்போட Nuptial Flight இருக்கும்.

தேனீக்கள் மற்றும் எறும்புகளின் சில வகைகள் பல ஆண்களுடன் இணையும். ஆனால் தீ எறும்புகள் போன்ற சில எறும்புகள் மட்டும், ஒரு ஆணுடன் மட்டுமே இணையும்.

எறும்புங்க ஏதாவது கூட்டுலயே இறந்துடுச்சுன்னா என்ன பண்ணுவாங்கன்னு தான். ஏன் அப்டி பண்றாங்கன்னா இறந்த எறும்புகளால மற்ற எறும்புகளோ, இராணியோ பாதிக்கப்படக்கூடாதுன்னு தான். ஒரு எறும்பு இறந்துச்சுன்னா அதோட உடம்புல இருந்து ஒலியிக் அமிலம் (Oleic Acid) வெளிப்படும். இந்த ஒலியிக் அமிலம் வந்துச்சுன்னா எறும்பு இறந்துடுச்சுன்னு பொருள். வெளியில இறந்த எறும்ப தூக்கிட்டு கூட்டுக்கு வரும்போது அந்த எறும்புங்க மேல இந்த அமில வாசனை இருந்துச்சுன்னா அதையும் தூக்கி வெளிய வீசிடுவாங்க.

இனச்சேர்க்கைக்கு அப்புறம் ஆண் இறந்துடும். ஆனா பெண் பூச்சில எரதாவது மாறுதல் உண்டாகுமான்னா, ஆமா உண்டாகும். இனப்பெருக்கம் முடிஞ்சதும் சில இராணி எறும்புகள் இறக்கைகளை உதிர்த்திடும். அப்புறமா புதிய காலனிய உருவாக்கும்.

– A. தங்கராஜ்



# பெண் குழந்தைகள் சிறு வயதிலேயே பருவமடைவதற்கு காரணம்

சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்கு மாதவிடாய் ஏற்படும் நிகழ்வுகள் இன்று மிகவும் பொதுவாக நடக்கிறது. இதனால், பெற்றோர் மத்தியில் பதற்றமும், கவலையும் அதிகரித்து வருகிறது.

இளம் வயதில் மாதவிடாய் ஏற்படுவதால் இந்த குழந்தைகளுக்கு என்ன நடக்கிறது என்று கூட புரிவதில்லை. சானிட்டரி நாப்கின் எப்படி பயன்படுத்த வேண்டும்? மாதவிடாய் காலத்தின் போது என்ன செய்ய வேண்டும்? மாதவிடாயின் போது ஏற்படும் உடல், மன ரீதியான பிரச்னைகளை எப்படி எதிர்கொள்வது என்று இந்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு உரிய விழிப்புணர்வை அவர்களின் அம்மாக்கள் தான் கொடுக்க வேண்டும்.

பெண்கள் பருவமடையும் வயது (மாதவிடாய் தொடங்குவது) குறைந்து வருவதற்கான காரணங்கள் குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உடல் பருமன், அதிக அசைவ உணவுகளின் பயன்பாடு, சில மரபணு காரணிகள், மன அழுத்தம், குடும்பத்தினருடன் ஏற்படும் சண்டை குறித்த கவலை போன்றவை இங்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

குழந்தைகள், சோயாபீன்களை அதிகம் உட்கொள்வதும் இதற்கு ஒரு காரணம். நமது உணவில் உள்ள ரசாயனம், பூச்சிக்கொல்லிகளும் இந்தப் பிரச்னைக்கு வழிவகுக்கிறது.

ஆனால் குறைந்த உடற்பயிற்சி மற்றும் உடல் பருமன் மட்டுமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

பெண் குழந்தைகளுக்கு உடல் எடை அதிகரிப்பது கவலைக்குரிய விஷயம். ஏனென்றால் அவர்களின் வளர்ச்சிக்கேற்ப உணவு முறையும் மாறுகிறது. உடல் வளர்ச்சிக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும் அதிக உணவாலும், அதற்கேற்ற உடற்பயிற்சி இல்லாததாலும் பெண் குழந்தைகளுக்கு உடல் எடை அதிகரிக்கிறது.

**மொபைல் பயன்பாடு காரணமா?**

மாதவிடாயை தூண்டுவதற்கு தேவையான ஹார்மோன்களை வெளியிட மூளையில் உள்ள ஹைபோதாலமஸ் சுரப்பிகளின் சமிக்ஞைகள் அவசியம். பெண் குழந்தைகள் வளரும் போது இந்த சுரப்பி மூலமாக ஹார்மோன் சுரக்கிறது. இதன் விளைவாக பெண் குழந்தைகளின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு, மாதவிடாய் ஏற்படுகிறது.

இருப்பினும், மாதவிடாய்க்கு தேவையான சிக்னல்களை அனுப்ப எந்த நேரத்தை மூளை தேர்வு செய்கிறது என்ற கேள்விக்கு நம்மிடம் உறுதியான பதில்கள் இல்லை. ஆயினும், சில

ஆராய்ச்சிகள் மூலமாக கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் பெண் குழந்தைகளைச் சுற்றி நிலவும் சூழல் காரணமாக இந்த ஹார்மோன் தூண்டப்படுகிறது என்பது தெரியவந்துள்ளது.

தொலைக்காட்சி, மடிக்கணினிகள், மொபைல் போன்களில் காணக் கிடைக்கும் உள்ளடக்கம், குழந்தைகளின் மூளையை தூண்டுகிறது. இன்று கிட்டத்தட்ட எல்லா குழந்தைகளிடமும் மடிக்கணினி, டேப்லெட்டுகள், மொபைல் போன்கள் உள்ளன. அன்லிமிடெட் இன்டெர்நெட்டும் மிகக்குறைந்த விலையில் கிடைக்கிறது. இணையத்தின் வளர்ச்சி காரணமாக மொபைல் போனில் நம்மால் அனைத்து விதமான உள்ளடக்கத்தையும் பார்க்க முடிகிறது. இதை சிறியவர் முதல் பெரியவர் வரை எளிதாக பார்க்கும் வகையிலேயே இந்தியா போன்ற நாடுகளின் பாதுகாப்பு இருக்கிறது.

அதனால் வீட்டில் உள்ள சிறு குழந்தைகள் மொபைல் போன் பயன்படுத்தும் போது, வயது வந்தோருக்கான அல்லது ஆபாச உள்ளடக்கத்தை பார்ப்பதால் அவர்களின் ஹார்மோன்களை தூண்டும் சிக்னலை மூளை அனுப்பக்கூடும். இதனால் இளம் வயதிலேயே பெண் குழந்தைகள் வயதுக்கு வந்து விடுகிறார்கள்.

ஆனால் கிராமப்புறங்களில் உள்ள பெண் குழந்தைகளுக்கு மாதவிடாய் தாமதமாக தொடங்குவதை நாம் காண்கிறோம். அங்கு மொபைல் போன் பயன்பாடு மற்றும் அதில் வரும் உள்ளடக்கங்கள் கிடைப்பதில் இருக்கும் வேறுபாடு காரணமாக இது தாமதமாகிறது.

இத்தகைய உள்ளடக்கம் ஆண், பெண் இருவரையும் பாதிக்கிறது. ஆனால், இங்கு பெண்களின் உடல் மிகவும் வித்தியாசமானது. கொஞ்சம் சிக்கலானதும் கூட. அதனால் முடிவுகள் சற்று வேகமாகத் தெரியும்.

ஆனால், எல்லாப் பெண்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. இதில் மற்ற காரணிகளும் பங்கு வகிக்கின்றன. அதனால்தான் மொபைல் போன் பயன்பாடு குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

**பெண் குழந்தைகளை நினைத்து கவலையா?**

மாதவிடாய் தொடங்கியவுடன், பெண் குழந்தைகளுக்கு சில பிரச்னைகள் ஏற்படுகின்றன.

சில குழந்தைகள் பருவமடைந்த பிறகு அவர்களின் உயரம் அதிகரிப்பது நின்றுவிடும். அதனால் சிறு வயதிலேயே மாதவிடாய் ஏற்படுவது என்பது கவலைப்பட வேண்டிய ஒன்றாக மாறிவிடுகிறது.

உதாரணமாக, பத்து வயதான மகளின் உயரம், தாயின் உயரத்தை விட மிகக்குறைவாக இருந்தால் உடனடியாக அந்த குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி மாதவிடாயை தாமதப்படும் மருந்துகளை தேவைகேற்ப எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால் இவை அனைத்தும் உரிய மருத்துவ பரிசோதனைகளுக்கு பிறகே முடிவு செய்யப்பட வேண்டும்.

பரிசோதனைகளுக்குப் பிறகு மருத்துவரின் மேற்பார்வையில் ஊசி போட்டால், மாதவிடாய் சிறிது தாமதமாகும் வாய்ப்பு உள்ளது. சில சந்தர்ப்பங்களில், இந்த காலகட்டத்தை இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும். இந்த காலகட்டத்தில் பெண்ணின் உயரமும் மற்ற உடல் அமைப்பும் மேம்படும்.

அதனால், சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் மருத்துவர்களை அணுக வேண்டும். பெற்றோர்கள், சரியான நேரத்தில் மருத்துவர்களை சந்திப்பது பலனைத் தரும். மாதவிடாய் தொடங்கிய சில மாதங்களுக்குப் பிறகு, இந்த சிகிச்சையின் செயல்திறன் குறைகிறது.

மாதவிடாய் முன்கூட்டியே தொடங்கினால், பாலிசிஸ்டிக் கருப்பை நோய் (PCOD) ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது. மாதவிடாயின் போது ஏற்படும் கடுமையான வலியின் காரணமாக, உடல் பருமன், நீரிழிவு போன்ற பிரச்சனைகளும் வரக்கூடும்.

எதிர்காலத்தில் மார்பக, சிறுநீர்க்குழாய் புற்றுநோய், இதய நோய்கள் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கும். முதல்முறையாக மாதவிடாய் வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக மச்சம், அக்குள் முடி, மார்பக வளர்ச்சி போன்ற அறிகுறிகள் தோன்றும். இந்த அறிகுறிகள் இளம் வயதிலேயே தோன்றினால், உடனடியாக ஒரு மகளிர் நல மருத்துவ நிபுணரை அணுக வேண்டும்.

**இந்த முன்னெச்சரிக்கைகள் அவசியம்**

மாதவிடாய் விரைவாக தொடங்குவது பெண் குழந்தைகளின் தவறு அல்ல. அதனால் விரும்பியதை செய்யவும், வெளியே சென்று விளையாடவும் அந்த குழந்தைகளை அனுமதிக்க வேண்டும்.

அந்த குழந்தைகள் சுத்தமாக இருப்பதை உறுதி செய்வது தாயின் பொறுப்பு. சானிட்டரி நாப்கினை தனியாக எப்படி பயன்படுத்துவது என்பதை குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பது அவசியம்.

குழந்தைகளின் தன்னம்பிக்கை குறையாமல் இருக்க அவர்களை எல்லா செயல்களிலும் பங்கு கொள்ள பெற்றோர் உதவ வேண்டும்.

வயதுக்கு வந்த பிறகு பெண் குழந்தைகளை வெளியேச் சென்று விளையாட பெரும்பாலான பெற்றோர்கள் அனுமதிப்பில்லை. இது ஒரு தவறான அணுகுமுறை, சில நேரங்களில் பெற்றோர் மீது வெறுப்பை உருவாக்கும் அபாயமும் இதில் இருக்கிறது.

பருவமடைந்த பிறகு முதல் வருடத்தில் மாதவிடாய் சற்று ஒழுங்கற்றதாக இருக்கும். 21 நாட்களுக்கும் குறைவான மாதவிடாய், ஏழு நாட்கள் வரை ரத்தப்போக்கு அல்லது அதிக ரத்தப்போக்கு ஆகியவற்றை நீங்கள் கண்டால், குழந்தைகளை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். பெண்களின் ஹீமோகுளோபின் அளவு குறித்து அடிக்கடி பரிசோதித்து பார்க்க வேண்டும். ஊட்டச்சத்து மிக்க உணவுகளை சீராக வழங்குவதும் அவசியமானது.

அரிசி, உருளைக்கிழங்கு, சர்க்கரை, மாவு உள்ளிட்ட உணவுப் பொருட்களை தினசரி எடுத்துக் கொள்வதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இளம் பருவத்திலேயே வயதுக்கு வரும் பெண்களுக்கு, தனிமை, குறைந்த ஆளுமை, பாலியல் உறவில் எளிதில் ஈடுபடுவது போன்ற மாற்றங்கள் அதிகமாக நடக்கிறது. அதனால், இந்த குழந்தைகளை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் தயார் செய்ய பெற்றோர்கள் உறுதுணையாக செயல்பட வேண்டும்.

மாதவிடாய் ஒரு நோய் அல்ல, பெண்களின் வளர்ச்சியில் அது ஒரு கட்டம். இதைப் பெண்களிடம் அவர்களின் தாய் எடுத்துக்கூற வேண்டும். மாதவிடாய் குறித்த விழிப்புணர்வை மகள்களுக்கு ஏற்படுத்த ஒவ்வொரு கட்டத்திலும் தாய் உடனிருக்க வேண்டும். – K. **கலைமணி**

## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

### FORM IV ( See Rule 8)

1. Place of publication : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.**

2. Periodicity : **Monthly**

3. Printer Name : **NV SIVASHANKAR**

   (a) Whether Citizen of India : **Yes**

   (b) Nationality : **Indian**

   (c) Address : **J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

4. Publisher Name : **NV SIVASHANKAR**

   (a) Whether Citizen of India : **Yes**

   (b) Nationality : **Indian**

   (c) Address : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.**

5. Editor Name : **RATHIKA S**

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

**Dated: 10.04.2023**

**NV SIVASHANKAR**
**Publisher**

# பெட்டிச் செய்தி

ஒரு கைதி தூக்கிலிடப்படும்போது அந்தக் கோரக் காட்சியைக் காணும் சாவர்க்கர், பாரத மாதா கி ஜே, இன்குலாப் ஜிந்தாபாத் என முழக்கமிடுவார். சாவர்க்கரின் குரல் ஒலித்தால், ஒரு போராளி தூக்கிலிடப்பட்டார் என மற்ற போராளிகள் உணர்ந்து கொள்வர்.



அந்தக் குரலைக் கேட்டவுடன் சிறையின் 698 அறைகளிலிருந்தும் அதே கர்ஜனை கம்பீரமாக ஒலிக்கும். உடனே, டேவிட் பார்ரி, சாவர்க்கரின் அறைக்கு வந்து கையாலும், காலாலும் காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டிவிட்டுப் போவான்.

விடுதலைப் போராட்ட வீரர்கள் ஒரு நாளில் 2 முறைகள்தாம் இயற்கைக் கடன்களைக் கழிக்க அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொரு அறையிலும் இரண்டு பானைகள் வைக்கப்பட்டிருக்கும். ஒன்று, குடிதண்ணீருக்காக. மற்றொன்று, இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்காக.

கொடுக்கப்பட்ட பணிகளிலேயே கடுமையான, கொடுமையான பணி செக்கிழுத்து எண்ணெய் ஆட்டுதல். கனமான செக்கு என்பதால், மார்பைச் சுற்றி ஒரு பக்கக் கயிறும் செக்கின் சக்கரத்தைச் சுற்றி மறு பக்கக் கயிறும் இருக்குமாறு அமைத்துக் கொண்டு செக்கைச் சுழற்ற வேண்டும்.

அதில் ஒரு நாளைக்குள் 30 பவுண்டு எண்ணெய் ஆட்டாவிட்டால், அந்தப் போராளிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்.

இத்தனை அராஜகங்களையும் தாங்கிக்கொண்டு வீர சாவர்க்கர் தம் அண்ணிக்கு மரணசாசனம் என்னும் தலைப்பில் எழுதிய கடிதம் இமயமலையில் செதுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அக்கடிதம் வருமாறு: நான் இறந்து, எனது சவம் எரிக்கப்பட்டு அந்தச் சாம்பல் அந்தமானின் துக்க ஓடையில், துயரமாகிற கண்ணீரால் அடித்துக்கொண்டு போகிறபோது பயங்கர நாவுகொண்டு பேசினாலும் சரி அல்லது கங்கையின் புனிதப் பளிங்கு நீரோடையில் நடுநிசியில் நட்சத்திர கணங்கள் செய்கிற நர்த்தனங்களோடு கொஞ்சிக் குலவினாலும் சரி, எனக்கு இரண்டும் ஒன்றுதான்.

இத்தனை அராஜகங்களையும் செய்த டேவிட் பார்ரியின் கதி என்ன தெரியுமா? பணியில் இருக்கும்போதே முழங்காலுக்குக் கீழே இரண்டு கணுக்கால்களும் செயலிழந்தன. எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பலனில்லாமல் போகவே, கடைசியாக அவனை அயர்லாந்துக்கே அழைத்துக் கொண்டு போவதாக முடிவெடுத்தனர்.

கப்பலில் பயணிக்கும்போதே நோய் முற்றி, இயற்கை எய்தினான் டேவிட் பார்ரி. இறந்த நாளிலிருந்து அயர்லாந்து செல்வதற்குப் பல நாள்கள் ஆகும் என்பதால், அவனுடைய பிணத்தைச் சாக்குமூட்டையில் கற்களுக்கு இடையே கிடத்திக் கடலில் வீசி எறிந்தனர்.

அந்தமான் சிறையில் 14 ஆண்டுகள் சிறைவாசமும் இரத்தினகிரியில் 14 ஆண்டுகள் அஞ்ஞாதவாசமும் செய்த சாவர்க்கர், 1963-ஆம் ஆண்டு மும்பையில் நோய்ப்படுக்கையில் விழுந்தார். மருத்துவர்கள் கொடுத்த மருந்தை அருந்த மறுத்தார்; உணவும் உட்கொள்ள மறுத்தார். நான் வந்த வேலை முடிந்துவிட்டது.

இனி இந்த உலகில் இருப்பது நியாயமில்லை எனக் கூறி, 22 நாள்கள் உண்ணாநோன்பிருந்து 26.02.1966 அன்று இறையடி எய்தினார்.

ரோஜாவுக்கு முட்கள் இருக்கின்றன என்பதால், அதனை யாரும் சுவாசிக்கத் தவறுவதில்லை; நீருக்கு நுரையுண்டு என்பதால், அதனை யாரும் நேசிக்கத் தவறுவதில்லை.

ஆனால், வாழ்நாள் முழுமையும் நாட்டு விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏந்திய மாவீரன் சாவர்க்கர், கடைசிக் காலத்தில் இந்த மண்ணின் மதத்தைத் தீவிரமாக ஆதரித்ததாலும், மகாத்மா காந்தியடிகளின் கொலையோடு சம்பந்தப்படுத்தி வழக்குப் பதிவு செய்யப்பட்டமையாலும், அவருடைய உச்சி முதல் உள்ளங்கால் வரை தழும்பேறிக் கிடக்கின்ற வீர வரலாற்றைப் படிக்க மறுக்கின்றனர்; பரிசீலிக்கத் தவறுகின்றனர் வீரசாவர்க்கரை.

இது ஏற்புடையதா? வருங்கால இளைஞர்கள்தான் இவரது சரியான முழு வரலாற்றையும் படித்து முடிவு செய்ய வேண்டும்.

– தமிழ் வீரன்

# நாட்டிலேயே மிக உயரமான அம்பேத்கர் சிலை திறப்பு



இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கரின் 132வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது 125 அடி உயர சிலையை தெலங்கானா முதல்வர் கே.சந்திரசேகர ராவ்(கேசிஆர்) திறந்து வைத்தார்.

நாட்டிலேயே உயரமான இந்த வெங்கலச் சிலை, ஹைதராபாத்தின் புகழ்பெற்ற ஹூசைன் சாகர் ஏரி கரையில், தலைமைச்செயலகத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ளது. ரூ.146.50 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த பிரம்மாண்ட சிலைக்காக 360 டன் துருபிடிக்காத இரும்பும், 114 டன் வெங்கலமும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

பிரம்மாண்டமாக நடைபெற்ற அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் அம்பேத்கருக்கு புகழஞ் சலி செலுத்தும் விதமாக ஹெலிகாப்டரில் இருந்து சிலைக்கு மலர்கள் தூவப்பட்டன. இந்த விழாவில் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

பிரம்மாண்ட விழாவில் பங்கேற்பதற்காக 119 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இருந்து, 35,000க்கும் அதிமான மக்கள் வருவார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது. விழாவில் பங்கேற்க பொதுமக்களின் வசதிக்காக மாநில போக்குவரத்து கழகம் சார்பில் 750க்கும் அதிமான பேருந்துகள் இயக்கப்பட்டன. விழாவில் பங்கேற்க வரும் மக்களுக்கு உணவு ஏற்பாடு செய்யப்பட்டு, ஒரு லட்சம் இனிப்பு பொட்டலங்கள், 1.50 லட்சம் மோர், அதே அளவு தண்ணீர் பாக்கெட்டுகள் ஏற்பாடு செய்து வழங்கப்பட்டன.

இந்த பிரம்மாண்ட சிலையை செய்வதற்காக மிகவும் பாடுபட்ட 98 வயதான சிற்பி ராம் வஞ்சி சுதாரை முதல்வர் கே.சந்திர சேகரராவ் பாராட்டினார். சிலை குறித்து, "தெலங்கானா தியாகிகள் நினைவிடம், மாநில சட்டப்பேரவை கட்டிடம் ஆகியவற்றுக்கு அருகில் இருக்கும் இந்தியாவின் உயரமான இந்த அம்பேத்கர் சிலை, தினமும் மக்களுக்கு உந்து சக்தியாகவும் மாநில நிர்வாகத்திற்கான ஊக்கமாகவும் இருக்கும்" என்று கே. சந்திர சேகர ராவ் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

– R.ஹரிகிருஷ்ணன்



# அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார்?

1. அம்மா 9 மாதம் சுமக்கிறார், அப்பா 25 வருடங்கள் சுமக்கிறார், இருவரும் சமம். ஏன் அப்பா பின்னால் இருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை.

2. அம்மா சம்பளம் இல்லாமல் குடும்பம் நடத்துகிறார், அப்பா தனது சம்பளத்தை எல்லாம் குடும்பத்திற்காக செலவு செய்கிறார், இருவருமே சமமான உழைப்பு.

இன்னும் அப்பா ஏன் பின் தங்குகிறார் என்று தெரியவில்லை.

3. அம்மா உனக்கு என்ன வேண்டுமானாலும் சமைப்பார், அப்பா உனக்கு என்ன வேண்டுமானாலும் வாங்கித் தருவார், அவர்களின் அன்பு சமமானது, ஆனால் தாயின் அன்பு மேன்மையாகக் காட்டப்படுகிறது.

அப்பா ஏன் பின்னால் இருக்கிறார் என்று தெரியவில்லை.

4. போனில் பேசினால் முதலில் அம்மாவிடம் பேச வேண்டும், கஷ்டத்தில் இருக்கும் போது அம்மா என்று அழுவாள். உங்களுக்குத் தேவைப்படும்போது மட்டுமே நீங்கள் அப்பாவை நினைவில் கொள்கிறீர்கள், ஆனால் மற்ற நேரங்களில் நீங்கள் அவரை நினைவில் கொள்ளவில்லை என்று அப்பா ஒருபோதும் வருத்தப்படவில்லையா?

குழந்தைகளின் அன்பைப் பெறுவதில் தந்தைகள் ஏன் பின்தங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

5. அலமாரியில் கலர்புல் புடவைகள், நிறைய குழந்தைகளின் உடைகள் இருக்கும் ஆனால் அப்பாவின் உடைகள் மிகக் குறைவு, அவர் தனது சொந்த தேவைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை.

இன்னும் அப்பா ஏன் பின்தங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை.

6. அம்மாவுக்கு நிறைய தங்க ஆபரணங்கள் உள்ளன, ஆனால் தந்தைக்கு திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட ஒரே ஒரு மோதிரம் மட்டுமே உள்ளது. இன்னும் குறைந்த நகைகள் பற்றி அம்மா புகார் செய்யலாம் மற்றும் அப்பா இல்லை.

அப்பா ஏன் பின்னால் இருக்கிறார் என்று இன்னும் தெரியவில்லை.

7. அப்பா தன் வாழ்நாள் முழுவதும் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள கடினமாக உழைக்கிறார்.

ஆனால் அங்கீகாரம் என்று வரும்போது, அவர் ஏன் எப்போதும் பின்தங்குகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

8. இந்த மாதம் காலேஜ் டியூஷன் கட்ட வேண்டும் என்று அம்மா சொல்கிறார், பண்டிகைக்கு எனக்கு புடவை வாங்கித் தாருங்கள், ஆனால் அப்பா புது உடை பற்றி யோசிக்கவே இல்லை. இருவருக்கும் சமமான அன்பு இருக்கிறது.

அப்பா ஏன் பின்தங்குகிறார் என்று இன்னும் தெரியவில்லை.

9. பெற்றோர்கள் வயதாகிவிட்டால், குழந்தைகள் சொல்கிறார்கள், அம்மா வீட்டு வேலைகளைக் கவனிக்க ஒரு வேலையாள் குறைந்தபட்சம் பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் அவர்களால் அப்பாவுக்கு பயனில்லை.

10. குடும்பத்தின் முதுகெலும்பு என்பதால் அப்பா பின்னால் இருக்கிறார்.

மேலும் நமது முதுகெலும்பு நம் உடலுக்குப் பின்னால் உள்ளது. ஆனால் அவரால் நாம் தனித்து நிற்க முடியும்.

ஒரு வேளை, இதனால்தான் அவர் பின்வாங்குகிறாரோ!

அனைத்து தந்தையர்களுக்கும் சமர்ப்பணம்.

– **அன்புமணி**

MOVIE TIME

# சினிமா விமர்சனம்

நடிகர்கள்: சூரி, விஜய் சேதுபதி, பவானி ஸ்ரீ, கௌதம் மேனன், ராஜீவ் மேனன், சேத்தன், தமிழ்.
இசை : இளையராஜா
ஒளிப்பதிவு : வேல்ராஜ்
தயாரிப்பு : எல்ரெட் குமார், RS Infotainment
வெளியீடு : ரெட் ஜெயன்ட்ஸ் மூவிஸ்
ரன்னிங் டைம் : 2 மணி 30 நிமிடம்

வெற்றிமாறன் இயக்கியுள்ள விடுதலை படத்தின் முதல் பாகம் வெளியாகியுள்ளது. சூரி, விஜய் சேதுபதி, பவானி ஸ்ரீ, கௌதம் மேனன், ராஜீவ் மேனன், சேத்தன், இயக்குநர் தமிழ் உள்ளிட்ட பலர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். முதன்முறையாக வெற்றிமாறன் - இளையராஜா கூட்டணியில் உருவாகியுள்ள விடுதலை திரைப்படம், ரசிகர்களுக்கு புதுவிதமான திரை அனுபவத்தை கொடுத்துள்ளது. இரண்டு பாகங்களாக உருவாகியுள்ள இப்படத்தில் விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார். தற்போது வெற்றிமாறனின் விடுதலை முதல் பாகத்தின் விமர்சனத்தை பார்க்கலாம்.

வெற்றிமாறனின் இயக்கம், சூரி முதல் முறையாக கதையின் நாயகனாக நடித்திருப்பது, விஜய் சேதுபதி கதாபாத்திரம் என்ன? இளையராஜாவின் இசை என விடுதலை-1 படத்தின் மீது மாபெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

அத்தகைய எதிர்பார்ப்பை விடுதலை திரைப்படம் முழுமையாக பூர்த்தி செய்ததா? இல்லையா? விமர்சனத்தில் பார்க்கலாம் வாங்க..

**கதைக்களம்**

மலைப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் இடத்தில் சுரங்கத்தை தோண்ட அரசாங்கம் முடிவெடுக்கிறது. ஆனால், இதை செய்தால் மக்களின் இடம் பறிபோகும் என்று அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு எதிராக பெருமாள் வாத்தியார் {விஜய் சேதுபதி} தலைமையில் மக்கள் படை ஒன்று உருவாகிறது.

தனது மக்கள் படை உதவியின் மூலம் அரசாங்கத்தை எதிர்த்து போராடி சுரங்கத்தை தோண்டவிடாமல் செய்கிறார் பெருமாள் வாத்தியார். மக்கள் படையை முழுமையாக ஒழித்துக்கட்ட அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படுவது தான் சிறப்பு படை. இதில் கைதேர்ந்த காவல் அதிகாரிகளை வைத்து பெருமாள் வாத்தியாரின் மக்கள் படையை பிடிக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

இதில் மக்கள் படையிலும் எண்ணிலடங்காத உயிர் இழப்புகள் ஏற்படுகிறது. அதே போல் சிறப்பு படையை சேர்ந்த காவல் அதிகாரிகளும் இறக்கிறார்கள். இப்படி 25 ஆண்டுகளுக்கும் மேலாக அரசாங்கத்தை எதிர்த்து பெருமாள் வாத்தியார் போராடி வருகிறார். இந்த நேரத்தில் சிறப்பு படையில் ஜீப் ட்ரைவாக வந்து சேர்கிறார் கதையின் நாயகன் சூரி {குமரேசன்}.




முதலில் மலை பகுதியில் இருக்கும் Check Postல் பணிபுரியும் அதிகாரிகளுக்கு ஜீப் மூலம் சாப்பாடு கொண்டு செல்லும் வேலையை தான் பார்க்கிறார் சூரி. இந்த சமயத்தில் மலை பகுதியில் வாழும் தமிழரசி {பவானி ஸ்ரீ} எனும் பெண்ணின் மீது காதலில் விழுகிறார். ஒரு பக்கம் காதல் ட்ராக் ஓடிக்கொண்டிருக்க மற்றொரு புறம் பெருமாள் வாத்தியாரை தேடுதல் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.


இதற்காக புதிய அதிகாரியாக நியமனம் செய்யப்படுகிறார் கவுதம் மேனன் {DSP சுனில் மேனன்}. இந்த நிலையில், ஒரு நாள் பெருமாள் வாத்தியார் தங்கியிருக்கும் இடத்தை சூரி

பார்த்துவிடுகிறார். இதனை பல முறை மேல் அதிகாரிகளிடம் சொல்ல முயற்சி செய்தும் அதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைக்கவில்லை.

ஆனால், ஒரு நாள் இதை தன்னுடைய மேல் அதிகாரியான கவுதம் மேனனிடம் கூறி, பெருமாள் வாத்தியாரை பிடிக்க அவர் பதுங்கியிருக்கும் இடத்திற்கு அதிகாரிகளுடன் சூரி செல்கிறார். இதன்பின் என்ன நடந்தது.? 25 ஆண்டுகளாக எந்த ஒரு அதிகாரியாலும் பிடிக்க முடியாத பெருமாள் வாத்தியாரை சூரி பிடித்தாரா? இல்லையா? பெருமாள் வாத்தியாரின் மீது சுமத்தப்பட்டிருக்கும் பழிகள் எல்லாம் உண்மை தானா? என்பதே மீதி கதை.

**படத்தை பற்றிய அலசல்**

மீண்டும் மீண்டும் தன்னுடைய இயக்கத்தின் மூலம் படம் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துகிறார்



இயக்குனர் வெற்றிமாறன். எதார்த்தமான இயக்கம், சில தொய்வுகள் இருந்தாலும் மிரட்டும் திரைக்கதை, படத்தில் இடம்பெறும் வசனங்கள் என கதைக்களத்தை நேர்த்தியாக கையாண்டுள்ளார். எளிய மக்கள் மீது கடுமையாக பாயும் சட்டம், போலீஸ் அதிகாரிகள் செய்யும் கொடுமைகள், குறிப்பாக பெண்களிடம் போலீஸ் நடந்துகொள்ளும் விதம் உள்ளிட்ட காட்சிகள் மெய்சிலிர்க்க வைக்கிறது.

கதையின் நாயகனாக வரும் சூரி எதார்த்தனமான நடிப்பில் கைதட்டல்களை அள்ளுகிறார். 'தவறு செய்தால் தானே மன்னிப்பு கேட்கவேண்டும், மக்களுக்கு உதவதானே காவல் துறை' என சூரி பேசும் வசனங்கள் சூப்பர். மேலும் ஸ்டண்ட் காட்சிகளில் பட்டையை கிளப்பியுள்ளார். குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சியில் கையில் துப்பாக்கி கிடைத்தவுடன் சூரி எடுக்கும் அவதாரம் செம மாஸ். அதுமட்டுமின்றி காதல் காட்சியிலும் அழகாக நடித்துள்ளார்.

கதாநாயகி பவானி ஸ்ரீ சூரிக்கு இணையான நடிப்பை திரையில் வெளிப்படுத்தியுள்ளார். அதற்க்கு தனி பாராட்டு. குறிப்பாக காவல் அதிகாரிகளால் கொடுமையை அனுபவிக்கும் பொழுது தன்னுடைய நடிப்பின் மூலம் அனைவரையும் கண்கலங்க வைத்துவிட்டார்.

பெருமாள் வாத்தியாராக வரும் விஜய் சேதுபதி, சில காட்சிகள் மட்டுமே வந்தாலும் அதற்கான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டார். இரண்டாம் பாகத்தில் கண்டிப்பாக விஜய் சேதுபதியின் ஆட்டம் பெரும் அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல் காவல் அதிகாரிகளில் ஒருவராக வரும் நடிகர் சேத்தன் எளிய மக்களுக்கு எதிராக ஈவு இரக்கம் காட்டாத நபராக சிறப்பாக நடித்துள்ளார். கவுதம் மேனன் வருகைக்கு பின் படம் சூடு பிடிக்கிறது. ராஜிவ் மேனன் தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தில் கச்சிதமாக நடித்துள்ளார். மற்றபடி அனைவரும் படத்தின் திரைக்கதையோடு ஒன்றி போகிறார்கள்.

இளையராஜாவின் பாடல்கள் கேட்க இனிமை, பின்னணி இசை படத்திற்கு பலம். வேல்ராஜ் ஒளிப்பதிவு சிறப்பு. மலைப்பகுதிகளில் கேமராவை கையாடுள்ள விதமும், லாக்கப் குள் கையாண்ட விதமும் பிரமாதம். எடிட்டிங் படத்தின் கதையை அழகாக எடுத்து சொல்கிறது. ஆக்ஷன் காட்சிகள் வடிவமைத்த விதம் சூப்பர்.

**பிளஸ் பாயிண்ட்**

* வெற்றிமாறன் இயக்கம், திரைக்கதை எடுத்துக்கொண்ட கதைக்களம்
* சூரியின் எதார்த்தமான நடிப்பு
* பவானி ஸ்ரீ, கவுதம் மேனன், சேத்தன் நடிப்பு
* பின்னணி இசை
* சில காட்சிகள் வந்தாலும் விஜய் சேதுபதி ஏற்படுத்திய தாக்கம்

**மைனஸ் பாயிண்ட்**

பெரிதாக எதுவும் இல்லை

மொத்தத்தில் 'வெற்றி'மாறன் கண்ட புதிய வெற்றி தான் இந்த விடுதலை-1

விரைவில்.. விடுதலை-2.

– B. **மணிகண்டன்**

# தமிழ் புத்தாண்டு கொண்டாட்டத்தில் பிரதமர் பங்கேற்றார்



பிரதமர் திரு.நரேந்திர மோடி 13.04.2023 அன்று மத்திய இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன் இல்லத்தில் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், தமது தமிழ் சகோதர சகோதரிகள் மத்தியில் புத்தாண்டு விழாவை கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார். "புத்தாண்டு என்பது பண்டைய பாரம்பரியத்தில் நவீனத்துவத்தின் திருவிழா. இத்தகைய பழமையான தமிழ் கலாச்சாரம், ஒவ்வொரு ஆண்டும் புதிய ஆற்றலுடன் முன்னேறி வருகிறது. இது உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது" என்று பிரதமர் கூறினார். தமிழ் மக்கள் மற்றும் கலாச்சாரத்தின் தனித்துவத்தை வலியுறுத்திய பிரதமர், தமிழ் கலாச்சாரத்தின் மீதான தமது ஈர்ப்பையும் உணர்வுப்பூர்வமான பற்றையும் வெளிப்படுத்தினார். குஜராத்தில் உள்ள தமது பழைய சட்டமன்றத் தொகுதியில் தமிழ் மக்கள் அதிக அளவில் இருப்பதையும், அவர்களது அளப்பரிய அன்பையும் நினைவுகூர்ந்த பிரதமர், தமிழ் மக்கள் தம்மீது கொண்டுள்ள அன்புக்கு நன்றி தெரிவித்தார்.

செங்கோட்டையில் இருந்து தாம் அறிவித்த ஐந்து உறுதிமொழிகளில் ஒன்றைப்பற்றி நினைவு கூர்ந்த திரு மோடி, ஒருவருடைய பாரம்பரியத்தில் பெருமை - பழமையான கலாச்சாரம் காலத்தால் முற்பட்டது என்று கூறினார். "உலகத்தைப் போலவே தமிழ்ப் பண்பாடும், மக்களும் நித்தியமானது. சென்னையிலிருந்து கலிபோர்னியா வரை, மதுரையிலிருந்து மெல்போர்ன் வரை, கோயம்புத்தூரில் இருந்து கேப் டவுன் வரை, சேலத்திலிருந்து சிங்கப்பூர் வரை; தமிழ் மக்கள் தங்கள் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை அவர்களுடன் எடுத்துச் செல்வதை நீங்கள் காண்பீர்கள்," என்று அவர் கூறினார். தொடர்ந்து பேசிய பிரதமர், "பொங்கலாக இருந்தாலும் சரி, புத்தாண்டாக இருந்தாலும் சரி, அவை உலகம் முழுவதையும் ஈர்த்துள்ளன. உலகின் பழமையான மொழி தமிழ். இதற்காக ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படுகிறோம். தமிழ் இலக்கியமும் பரவலாக மதிக்கப்படுகிறது. தமிழ்த் திரையுலகம் பல அடையாளப் படைப்புகளை நமக்குக் கொடுத்திருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் மக்களின் அளப்பரிய பங்களிப்பை நினைவுகூர்ந்த பிரதமர், சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் வளர்ச்சியில் தமிழ் மக்களின் பங்களிப்பையும் சுட்டிக் காட்டினார். சி.ராஜகோபாலாச்சாரி, கே.காமராஜ், டாக்டர் கலாம் போன்ற பெரியோரை நினைவு கூர்ந்த அவர், மருத்துவம், சட்டம், கல்வித் துறைகளில் தமிழர்களின் பங்களிப்பு ஒப்பிட முடியாதது என்றார்.

உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாடு இந்தியா என்பதை மீண்டும் வலியுறுத்திய பிரதமர், தமிழகத்தைச் சேர்ந்த சில முக்கிய ஆதாரங்கள் உட்பட அதற்கு மறுக்க முடியாத சான்றுகள் உள்ளன என்றார். உத்திரமேரூரில் உள்ள 11-12 நூற்றாண்டுகள் பழமையான கல்வெட்டு பற்றி அவர் குறிப்பிட்டார். இது பண்டைய காலங்களிலிருந்து ஜனநாயக நெறிமுறைகளையும் நடைமுறைகளையும் விவரிக்கிறது. இந்தியாவை ஒரு தேசமாக வடிவமைத்த தமிழ் கலாச்சாரத்தில் நிறைய விஷயங்கள் நிறைந்துள்ளன, என்று பிரதமர் கூறினார். காஞ்சிபுரத்தில் உள்ள வெங்கடேசப் பெருமாள் கோயில், சதுரங்க வல்லபநாதர் கோயில் ஆகியவற்றின் வளமான பண்டைய பாரம்பரியம் வியக்கத்தக்க அளவில் நவீனகாலத்துக்கும் பொருத்தமானவை என்று அவர் தெரிவித்தார்.





செழுமையான தமிழ் கலாச்சாரத்திற்கு சேவை செய்யும் வாய்ப்பை பிரதமர் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். ஐக்கிய நாடுகள் சபையில் தமிழில் மேற்கோள் காட்டியதையும், யாழ்ப்பாணத்தில் நடந்த கிரஹப்பிரவேச விழாவில் கலந்துகொண்டதையும் நினைவு கூர்ந்தார். யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் திரு மோடி ஆவார். அவரது பயணத்தின் போதும் அதன் பின்னரும் அங்குள்ள தமிழர்களுக்காக பல நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. "தமிழ் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்றும் இந்த உணர்வு என்னுள் புதிய ஆற்றலை நிரப்புகிறது" என்று பிரதமர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற காசி தமிழ்ச் சங்கமத்தின் வெற்றி குறித்து பிரதமர் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்தார். "இந்த நிகழ்ச்சியில், பழமை, புதுமை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை ஒரே நேரத்தில் கொண்டாடியுள்ளோம்" என்று பிரதமர் கூறினார். சங்கமத்தில் தமிழ் புத்தகங்கள் மீதான மோகத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், "இந்தி பேசும் பிராந்தியத்தில், இந்த டிஜிட்டல் யுகத்தில், தமிழ் புத்தகங்கள் இப்படி விரும்பப்படுகின்றன, இது நமது கலாச்சாரத் தொடர்பைக் காட்டுகிறது. தமிழ் மக்கள் இல்லாமல் காசிவாசிகளின் வாழ்க்கை முழுமையடையாது, நான் காசி வாசியாகிவிட்டேன், காசி இல்லாமல் தமிழ் மக்களின் வாழ்க்கையும் முழுமையடையாது என்று நான் நம்புகிறேன். சுப்பிரமணிய பாரதியின் பெயரில் புதிய இருக்கையையும், காசி விஸ்வநாதர் கோயில் அறக்கட்டளையில் தமிழர் ஒருவருக்கு இடத்தையும் வழங்கியுள்ளதை திரு மோடி சுட்டிக்காட்டினார்.

தமிழ் இலக்கியம் கடந்த கால ஞானத்துடன் எதிர்கால அறிவுக்கு ஆதாரமாக இருப்பதால் அதன் வலிமையை பிரதமர் எடுத்துரைத்தார். பழங்கால சங்க இலக்கியங்களில் ஸ்ரீ அன்னாவின் குறிப்பைச் சுட்டிக்காட்டிய பிரதமர், "இந்தியாவின் முன்முயற்சியால் இன்று உலகம் முழுவதும் நமது ஆயிரம் ஆண்டுகள் பழமையான சிறுதானிய பாரம்பரியத்துடன் இணைந்துள்ளது. மீண்டும் ஒருமுறை உணவுத் தட்டில் தினைக்கு இடம் கொடுத்து மற்றவர்களுக்கும் உத்வேகம் அளிக்கும் வகையில் உறுதி எடுக்க வேண்டும் என்று கூட்டத்தினரை அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் கலை வடிவங்களை இளைஞர்கள் மத்தியில் ஊக்குவித்தல் மற்றும் அவற்றை உலகளவில் வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார். "இன்றைய இளம் தலைமுறை யினரிடையே பிரபலமாக இருப்பவர்கள், அந்த அளவுக்கு அதிகமாக அடுத்த தலைமுறைக்கு இதனை எடுத்துச் செல்வார்கள். எனவே,



இக்கலை குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது நமது கூட்டுப் பொறுப்பாகும்,'' என்றார் பிரதமர். "சுதந்திர அமிர்த காலத்தில், நமது தமிழ் பாரம்பரியத்தை அறிந்து, அதை நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துரைப்பது நமது பொறுப்பு. இந்த பாரம்பரியம் நமது ஒற்றுமை மற்றும் 'தேசம் முதலில்' என்ற உணர்வின் அடையாளமாகும். தமிழ் கலாச்சாரம், இலக்கியம், மொழி மற்றும் தமிழ் பாரம்பரியத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" என்று கூறிய பிரதமர் தமது உரையை நிறைவு செய்தார்.

**– நா வீ சிவசங்கர்**

# தமிழ்நாடு பட்ஜெட் 2023-24 முக்கிய அறிவிப்புகள்




**தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு செப்டம்பர் 15-ம் தேதி முதல் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.** குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரை பிறந்தநாளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதற்காக ரூ.7000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீடு கட்ட அரசு ஊழியர்களுக்கான கடன் ரூ.50 லட்சமாக உயர்வு.** வீடு கட்ட அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் முன்பணம் ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தப்படும்.

ஓய்வூதியதாரர்கள் குடும்ப நலன் கருதி சிறப்புநிதியாக கூடுதலாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் – நிதி அமைச்சர்.

தமிழகத்தில் ரூ.77 ஆயிரம் கோடியில் 15 புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மின்சார வாரியத்தின் இழப்பு ரூ.11 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.7 ஆயிரம் கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் தோல் அல்லாத காலணி தொழிற்சாலைகள் புதிதாக அமைக்கப்படும். இதன் மூலம் 32 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் – நிதி அமைச்சர்.

விருதுநகர், வேலூர், கோவை ஆகிய இடங்களில் ரூ.410 கோடி செலவில் 4 சிப்காட் பூங்காங்கள் அமைப்பதன் மூலம் 22000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். – நிதி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு ரூ.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா கொள்கை ஒன்றையும் அறிமுக்கப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மீன்பிடி தடைகாலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் சிறப்பு நிவாரணத்திட்டத்துக்கான பணிகளுக்கு ரூ.389 கோடி நிதி ஒதுக்கீடு.

சென்னை, தாம்பரம் ஆவடி, கோயம்புத்தூர் மதுரை திருச்சிராப்பள்ளி சேலம் மாநகராட்சியில் முக்கிய பொது இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும்.

தகவல் தொழில்நுட்ப நகரங்கள் அமைக்க திட்டம். இந்த நகரங்களில் உலகளாவிய திறன்மிகு பயிற்சி மையங்கள், பொதுபோக்கு அம்சங்கள் ஆகியவை அமைக்கப்படும்.

பூந்தமல்லி முதல் கோடம்பாக்கம் வரையிலான மெட்ரோ ரயில் செயல்பாடு 2025-ல் நடைமுறைப்படுத்தப்படும்.

மகளிரின் கட்டணமில்லா பயணத்திட்டத்துக்கு ரூ.2,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விருதுநகரில் ஜவுளிப்பூங்கா அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் கூட்டுப் பங்களிப்புடன் இந்த ஜவுளிப்பூங்க அமைக்கப்படும்.

அண்ணாசாலையில் 4 வழி மேம்பாலம் அமைக்கப்படும்.

தேனாம்பேட்டை முதல் சைதாபேட்டை வரை ரூ.621 கோடி செலவில் 4 வழிச்சாலை.

கோவையில் அவிநாசி சத்தியமங்கல் சாலை உள்ளிட்ட இடங்களில் ரூ.9,000 கோடி செலவில் மெட்ரோ அமைக்கப்படும்.

அவிநாசி சாலை முதல் சத்தியமங்கலம் வரை மெட்ரோ ரயில்தடம் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கிராம பகுதிகளில் 10,000 குளங்கள் ஊரணிகள் ரூ.800 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

மரகாணத்தில் பன்னாட்டு பறவைகள் சரணாலயம், ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு.

217 செயற்கை பவளப்பாறைகள் அமைக்க திட்டம். அதற்காக 79 கோடி நிதி ஒதுக்கீடு.

மீனவர்கள் நலனுக்கு ரூ.392 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லின் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ரூ.7145 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

மதுரையில் ரூ.8500 கோடியில் மெட்ரோ ரயில் திட்டம்.

மாநிலத்தில் ரயில் போக்குவரத்து திட்டங்களின் பங்கு குறைவாக இருப்பதால் மேம்படுத்துவதற்கு ரயில்வே துறையுடன் இணைந்து புதிய ரயில் போக்குவரத்து திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கோவை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ. 9000 கோடி ஒதுக்கீடு. சென்னை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் ரூ.8500 கோடியில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும்.

வடபழனி, திருவான்மியுர், வியாசர்பாடி பணிமனைகள் முதல்கட்டமாக மேம்படுத்தப்படும்.

போக்குவரத்துத் துறைக்கு ரூ.8,056 கோடி நிதி ஒதுக்கீடு.

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்துக்காக 5,145 கி.மீ தூர சாலைகள் மேம்படுத்த ரூ.2,000 கோடி நிதி.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு ரூ.16,262 கோடி ஒதுக்கீடு.

ஊரக மற்றும் ஊராட்சி வளர்ச்சித்துறைக்கு ரூ.22562 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யவும், 500 பேருந்துகளை புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணாசாலையில் 4 வழி மேம்பாலம் அமைக்கப்படும்.

சென்னையில் மறுகுடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் நலன்களுக்காக கண்ணகி நகர் உள்ளிட்ட பகுதிகளீல் உடற்ப-யிற்சி மையங்கள், விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

சென்னையில் சமமான வளர்ச்சியை உறுதி செய்ய வடசென்னை வளர்ச்சித் திட்டம் ஒன்றை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளுக்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீவுத்திடலில் திறந்தவெளி திரையரங்கம் உள்ளிட்ட பல புதிய வசதிகளை மேற்கொள்ள ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வனம் மற்றும் சுற்றுசூழல் துறையில் கீழ் நிதி ஒதுக்கீடு.

காலநிலை மாற்றத்தை காப்பாற்றுவதில் மகளிரின் பங்கு மிக முக்கியமானது என்பதை உணர்ந்து 'காலநிலையை காக்கும் வீராங்கனைகள் திட்டம்' உருவாக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் முதல்கட்டமாக, 500 மகளிர் சுய உதவிக்குழுக்களை தெர்ந்தெடுத்து ரூ.20 கோடி செலவில் அவர்களுக்கு மின்சார ஆட்டோக்கள் வழங்கப்படும். இந்த வாகனங்களின் உதவியுடன் அவர்கள் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவார்கள். இதற்கு மொத்த ஒதுக்கீடாக ரூ.1,248 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோவையில் செம்மொழி பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும். இதற்காக ரூ.172 கோடி ஒதுக்கீடு.

ஈரோடு மாவட்டம் அந்தியூர், கோபிசெட்டிபாளையத்தில் உள்ள 80,560 ஹெக்டர் பரப்பளவு உள்ள காடுகளை தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலையமாக அறிவிப்பு. இது 18-வது வனவிலங்கு சரணாலையமாகும். அழிந்துவரும் வனவிலங்குகளை காப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

நிலம் வாங்குவோரின் சுமையை குறைக்க பதிவு கட்டணம் நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக குறைக்கப்படும் - நிதி அமைச்சர்.

கட்டட வரைபட அனுமதி மற்றும் மனை வரைபட அனுமதியை இணைய வழியில் பெற புதிய இணையதளம் உருவாக்கப்படும்.

விவசாயக் கடன் தள்ளுபடிக்கு ரூ.2393 கோடி ஒதுக்கிடு.

கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடிக்கு ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான ரூ.600 கோடி கடன் தள்ளுபடி.

ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்களுக்கான மானியம் வழங்க ரூ.10,500 கோடி ஒதுக்கீடு.

உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு வழங்கும் ஊக்கத்தொகையின் காரணமாக உயர்கல்வி சேரும் மாணவிகள் எண்ணிக்கை 29 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

கிராமங்களில் 10,000 நீர்நிலைகளைச் சீரமைக்க ரூ. 800 கோடி.

கிராமங்களில் 10,000 நீர்நிலைகளைச் சீரமைக்க ரூ. 800 கோடி.

நீர்ப்பாசன வேளாண்மை மேம்படுத்தத் திட்டத்தில் 259 கோடி மதிப்பீட்டில் ஏரிகள் பழுதப்பார்த்தல், சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பாளையங்கோட்டை சித்த மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.40 கோடி.

15 மாவட்டங்களில் மாற்றுதிறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பெண் தொழில் முனைவோர்கள் புத்தொழில் இயக்கம் ஒன்றை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. பெண்கள் தொழில் முனைவில் ஈடுபட்டு வெற்றியடைய அனைத்து விதமான உதவிகளும் இந்த இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக்குழு கடன் இலக்கு ரூ.30 ஆயிரம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித்துறைக்கு ரூ.6,967 கோடி.

பேராசிரியர் அன்பழகன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய வகுப்பறைகள் ஆய்வகங்கள் கட்ட ரூ.1,500 கோடி நிதி ஒதுக்கீடு.

ஆதிதிராவிடர் நலனுக்காக ரூ.3,513 கோடி ஒதுக்கீடு. மதுரை, கோவை, திருச்சி, நீலகிரியில் ரூ.100 கோடி செலவில் ஆதி திராவிட மாணவர்களுக்கான புதிய விடுதிகள் கட்டப்படும்.

சென்னையில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கம் ரூ.25 கோடி செலவில் சீரமைக்கப்படும்.

ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ்: 1,000 மாணவர்களுக்கு உதவித்தொகையாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு.

புத்துயிர் வண்ணார் நல வாரியத்துக்கு ஊக்கமளிக்க ரூ.10 கோடி நிதி.

ரூ.110 கோடியில் 4 மற்றும் 5-ம் வகுப்புக்கு எண்ணும் எழுத்தும் திட்டம்.

54 அரசு பால்டெக்னிக் கல்லூரிகளில் ரூ.2,283 கோடி செலவில் திறன்மிகு மையங்கள்.

நகர்புறம் மற்றும் ஊரக பகுதிகளில் ஆதிதிராவிடர் அயோத்திதாச பண்டிதர்குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - நிதி அமைச்சர்.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு ரூ.1,444 கோடி. மாற்றுத்திறனாளிகள் துறை மிகவும் முக்கியம் என்பதால் முதல்வர் தனது நேரடி கண்காணிப்பில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம், தொழில்பயிற்சி போன்றவற்றை திறம்பட செயல்படுத்திவருகிறார். 6.84 லட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகையை ரூ.1000 லிருந்து 1500 உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிப்பு அதிகமுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1500 லிருந்து ரூ.2000 ஆக ஊக்கத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் கடன் உதவி, வட்டி மானியம் போன்ற சலுகைகளும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழிற்பயிற்சி வழங்க ரூ.50 கோடி ஒதுக்கீடு.

தமிழகத்தைச் சேர்ந்த படைவீரர்கள் குடும்பத்துக்கு வழங்கப்படும் கருணைத்தொகை ரூ.40 லட்சமாக உயர்வு.

மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு.

மதுரையில்கலைஞர்நூலகம்ஜூன்மாதம்பயன்பாட்டுக்குவரும்.

வரும் 2023-2024-ம் நிதி ஆண்டில் 10 லட்சம் மாணவர்களுக்கு தொழில்பயிற்சி வழங்க வேண்டும் என தி.மு.க அரசு உறுதி பூண்டுள்ளது. - நிதி அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன்.

வரும் ஆண்டில் 10 கோடி மதிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழா மற்றும் இலக்கிய திருவிழா நடத்தப்படும். சர்வதேச புத்தக கண்காட்சி வரும் நிதி ஆண்டிலும் நடத்தப்படும்.

குடிமைப்பணி தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதனால் குடிமைப்பணியில் தேர்ச்சி பெற்ற 1,000 மாணவர்களுக்கு முதல்நிலை தேர்வுக்கு தயாராக ரூ.7,500 உதவித் தொகையும், முதல்நிலை தேர்வுக்கு தயாராகும் 1,000 மானவர்களுக்கு ரூ.25,000 உதவித்தொகையும் வழங்கப்படும். - அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன்.

உயர்கல்வி துறைக்கு ரூ.6967 கோடி ஒதுக்கீடு.

சமூக நீதியையும் சமுத்துவக் கொள்கையையும் கொண்டுள்ள இந்த அரசு ஆதிதிராவிட பழங்குடியின மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுவருகிறது. 100 கோடி ரூபாயில் ஆதிதிராவிட பழங்குடியின விடுதிகள் கட்டப்படும்.

குடிமைப்பணி தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதனால் குடிமைப்பணியில் தேர்ச்சி பெற்ற 1,000 மாணவர்களுக்கு முதல்நிலை தேர்வுக்கு தயாராக ரூ.7,500 உதவித்தொகையும், முதல்நிலை தேர்வுக்கு தயாராகும் 1,000 மானவர்களுக்கு ரூ.25,000 உதவித்தொகையும் வழங்கப்படும்.

தொழிற்பயிற்சி மையங்கள் புதுப்பிக்கப்படும்.

அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்துக்கு ரூ.1000 கோடி ஒதுக்கீடு.

கிருஷ்ணகிரியில் உள்ள சூளகிரி சிப்காட் மேம்படுத்தப்படும்.

ரூ.110 கோடியில் 4,5ம் வகுப்பு மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ரூ.120 கோடி செலவில் சென்னை அம்பத்தூரில் உலகளாவிய பயிற்சி மையம்.

இளைஞர்களுக்கு தொழிற்சாலைகளில் திறன் பள்ளிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். 10 லட்சம் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கப்படும்.

சென்னை அம்பத்தூரில் இளைஞர்களுக்கான நவீன வசதிகளுடன் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

மதுரையில் கட்டப்பட்டு வரும் கலைஞர் நூலகம் வருகிற ஜூன் மாதத்தில் பயன்பாட்டுக்கு வரும் என பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் உறுதி.

தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி மையங்கள் ரூ.2,877 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

சீர்மரபினர் இந்து சமய அறநிலைத்துறை பள்ளிகளும் பள்ளி கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்படும்.

சென்னை கிண்டியில் கலைஞர் கருணாநிதி பெயரில் பல்நோக்கு மருத்துவமனை. இந்த ஆண்டே திறக்கப்படும் - அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன்.

குடிமைப்பணி முதன்மை தேர்வுக்குத் தயாராகும் 1000 மாணவர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

4, 5 வகுப்பு மாணவர்களுக்கும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இனி அனைத்து துறைகள் நடத்தும் அனைத்து பள்ளிகளுமே பள்ளிக்கல்வி துறையின் கீழ் கொண்டுவரப்படும்.
மருத்துவம் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

அரசு பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.1500 கோடி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது.

கிண்டியில் கருணாநிதி பெயரில் பன்னோக்கு மருத்துவமனை நடப்பாண்டிலேயே கட்டப்படும்.

211 தொழிற்சாலைகளில் மக்களை தேடி மருத்துவம் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.18661 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் விரிவுபடுத்தப்படும்.

தமிழகத்தில் தமிழ் கணினி பன்னாட்டு மாநாடு நடத்தப்படும்.

தாளமுத்து நடராஜனுக்கு சென்னையில் நினைவு மண்டபம் அமைக்கப்படும்.

தமிழ் மொழி உலகம் மொழியாக திகழ பண்பாட்டு மாநாடு நடத்தப்படும்.

தொழில்நுட்பத் துறையில் தமிழ் மொழியை வளர்க்க பண்பாட்டு தமிழ் மாநாடு நடத்தப்படும்.

வயது முதிர்ந்த 590 அறிஞர்களுக்கு இலவச பேருந்து பயண பாஸ் வழங்கப்படும்.

சென்னை சங்கமம் கலை விழா மேலும் 8 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

நாட்டுப்புற கலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தஞ்சையில் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும். மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து, நடராஜனுக்கு நினைவிடம் அமைக்கப்படும்.

இலங்கை தமிழர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்துக்கு ரூ.223 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

-அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்.

அம்பேத்கரின் படைப்புகள் தமிழில் மொழிப்பெயர்க்கப்படும். நாட்டுப்புற கலைகளை மேம்படுத்தவும் அவற்றை காப்பாற்றவும் நாட்டுப்புற கலை பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். சென்னை சங்கமம் கலைநிகழ்ச்சி மேலும் 8 நகரங்களில் நடத்தப்படும்.

-நிதியமைச்சர்

**- ஆசிரியர்**

# மருந்து விலை குறைக்க வேண்டியது அவசியம்

ஒவ்வொரு ஆண்டும் தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம், அத்தியாவசிய மருந்துகள் விலையை மாற்றி அமைக்கும். அதன்படி, மூலப்பொருட்களின் விலை உயர்வு, உற்பத்தி செலவு அதிகரிப்பு உள்ளிட்டவை காரணமாக, மருந்துகளின் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற, மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு விலை உயர்வு அறிவிக்கப்பட்டு, அமலுக்கு வந்துள்ளது. ஒரு மருந்தையோ, மாத்திரையையோ ஒரு நிறுவனம் புதிதாக கண்டுபிடித்தால், முதல், 20 ஆண்டுகளுக்கு அந்த நிறுவனம் மட்டுமே, அந்த மருந்தை விற்பனை செய்ய முடியும். இது, காப்புரிமை காலம் என, அழைக்கப்படுகிறது. இந்த, காப்புரிமை காலத்தில், பல மருந்துகள் அதிகமான விலையில் விற்கப்படுகின்றன.

இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்காகவே, ‘நாடு முழுதும், 32 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் துவக்கப்படும்‘ என, மத்திய அரசு அறிவித்தது. ஆனாலும், இதுவரை, 9,000 மருந்தகங்கள் வரையே துவக்கப்பட்டு, அவற்றில் குறைவான விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றன. நம் நாட்டின் மக்கள் தொகையை கணக்கிடுகையில், இந்த மருந்தகங்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். எனவே, விரைவில் மக்கள் மருந்தகங்கள் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு விற்கப்படும் மருந்துகளின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து மருந்துகள் இறக்குமதி செய்வதை தவிர்த்து, உள்நாட்டிலேயே அரசு சார்பில், மருந்துகள் தயாரித்து, மக்கள் மருந்தகங்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன், மேலும் பல மருந்து, மாத்திரைகளை அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் சேர்த்து, அவற்றை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்கி, கட்டுப்படுத்தப்பட்ட விலையில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், தற்போதைய விலை உயர்வில் மாற்றங்களை ஏற்படுத்தி, மக்களுக்கு நல்லது செய்ய முன்வர வேண்டும்.

– A.ஐயப்பன்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

UPI Number:
9962245338

# வசந்தத்தை வரவேற்கும் புத்தாண்டு



பாரதப் பண்பாட்டில் பண்டிகைகள் எல்லாமே, உட்பொருள் நிறைந்த தத்துவங்களை உள்ளடக்கியபடி, வெளிப்புறச் சடங்குகளால் விமரிசையாகக் கொண்டாடப்படும் வகையில் அமைந்துள்ளன. புத்தாண்டும் அவ்வகையில் பொருள் பொதிந்த விழாவே! தமிழகம் உட்பட பாரதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வசந்தத்தை வரவேற்கும் திருநாளே, சித்திரையில் பிறக்கும் புத்தாண்டு தினம்.

பூமத்திய ரேகைக்கு நேர் மேலே சூரியன் செங்குத்தாக வந்து, பகலும் இரவும் சரிசமமாக இருக்கும் நாளை, பகலிரவுச் சமநாள் (Equinox) என்பார்கள். அந்தச் சமநாளில் இரவுப் பொழுதும், பகல் பொழுதும் சரிசமமாக இருக்கும். இந்தச் சமநாள் ஆண்டுக்கு இரு முறை வரும். பகல் பொழுது அதிகமாக இருக்கும் வேனில் காலத்தின் தொடக்கத்திலும், அதற்குப் பின் 6 மாதங்கள் கழிந்து, இரவுப் பொழுது அதிகமாக இருக்கும் குளிர்காலத்தின் தொடக்கத்திலும் இந்தச் சமநாள் வரும்.

இவற்றில், முடக்கிப் போடும் பனிக்காலம் நீங்கி, சூரியனின் பொற்கதிர்கள் வீரியம் பாய்ச்சும் இளவேனிற்காலத்தின் தொடக்கத்தையே நம் முன்னோர்கள் புத்தாண்டு தினமாக வகுத்தனர். ஒரு நாளின் தொடக்கம் எவ்விதம் சூரியனின் முதல் கிரணம் பூமியில் விழுகின்ற விடியலில் தொடங்குகிறதோ, அதைப்போல வருடத்தின் தொடக்கமும் சூரியனின் கதிர்கள் இதமளிக்கும் வெம்மையாக விழத் தொடங்குகின்ற இளவேனில் காலத்தில் தொடங்குகிறது.

ஆறுவகைப் பருவங்களில், சித்திரை, வைகாசி என்ற இரு மாதங்களே இளவேனில் பருவகாலத்துக்கு உரியவை. வானியல் கணக்கின்படி சித்திரை மாதத்தை மேஷ மாதம் என்பார்கள். மேஷம் என்றால் ஆடு. வானத்தில், ஆடு போல் தோற்றம் அளிக்கின்ற ராசிக் கூட்டத்தின் ஊடாக சூரியன் பிரவேசிக்கின்ற நாளே ஆண்டின் தொடக்கமாகும். சித்திரை மாதமே ஆண்டின் தொடக்க மாதம் என்பதற்கு, சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான நெடுநல்வாடை சான்று பகர்கிறது.

“திண்நிலை மருப்பின் ஆடு தலைஆக, விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து”

என்பன அந்தப் பாடல் வரிகள் (160–161). வீங்குசெலல் மண்டிலம் என்பது சூரியனைக் குறிக்கும். “ஆகாயத்திலே, திண்மையான நிலைத்த கொம்பைக் கொண்ட ஆடு போல் தோற்றமளிக்கும் மேஷ ராசி தொடங்கி, ஏனைய ராசிகளில் சென்று திரிகின்ற, மிகுதியான இயக்கத்தைக் கொண்ட சூரியன்” என்று இதற்குப் பொருள். ஆகையால்தான், சூரியனின் பயணம் தொடங்குகின்ற சித்திரை முதல்நாளைப் புத்தாண்டு தினமாக நம் முன்னோர்கள் கொண்டனர்.

மேஷ மாதம் என்ற சித்திரை மாதத்தைத்தான் ஆண்டின் தொடக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதற்குக் கூடுதல் ஆதாரங்களும் உள்ளன. பத்துப்பாட்டைச் சேர்ந்த மலைபடுகடாம் என்ற மற்றொரு நூலில்...

“தலைநாள் பூத்த பொன்இணர் வேங்கை”

என்ற வரி (305) வருகிறது. தலைநாள் என்றால் ஆண்டின் தொடக்க நாள் என்று பொருள். பொன் போன்ற நிறத்தில் கொத்துக் கொத்தாகப் பூக்கும் இயல்பைக் கொண்ட வேங்கைப் பூ, சித்திரையில்தான் பூக்கும். ஆகையால்தான் ஆண்டின் தொடக்கத்தில் பூத்தது என்பதைக் குறிக்க “தலைநாள் பூத்த” என்று மலைபடுகடாம் ஆசிரியர் பெருங்கௌசிகனார் கூறியுள்ளார்.

இதேபோல், புலவர் நத்தத்தனார் பாடியுள்ள சிறுபாணாற்றுப்படை என்ற நூலிலும் சித்திரை முதல்தேதி தலைநாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்”

என்பது அந்தப் பாடல் வரி (147). இளவேனிற்காலம் தொடங்குகின்ற சித்திரை முதல் நாளில் பூத்துள்ள செருந்திப் பூ (நெட்டுக்கோரைப்பூ), தன்னைக் கண்டாரைப் பொன்னோ என்று வியக்கவைக்கிறது என்று இதற்குப் பொருள்.

இதேபோல் சித்திரையில் பொன்போலும் பூக்கள் பூக்கத் தொடங்குவதை வால்மீகி மகரிஷி

எழுதியுள்ள ராமாயணமும் தெரிவிக்கிறது. “சைத்ர: ஸ்ரீமான் அயம் மாஸ: புண்ய: புஷ்பிதகானன:” என்பன அவ்வரிகள். “சித்திரை மாதம் ஸ்ரீ எனப்படும் வளமையோடு கூடி யிருக்கிறது. இதேபோல் மகாவிஷ்ணுவும் ஸ்ரீ எனப்படும் திருமகளோடு கூடியிருக்கிறார். மாதங்களில் ஆதி மாதம், சித்திரை. தேவர்களில் ஆதிமூலர், மகாவிஷ்ணு. சித்திரை மாதத்தில் தொடங்கப்படும் செயல்கள் நற்பலன்களைத் தருவதைப்போல், திருமாலும் புண்ணியமாகிய நற்பலனைத் தருகிறார். சித்திரை மாதத்தில் செடிகளின் உச்சியில் பூக்கள் பூத்திருப்பது செடிகளுக்கு மகுடம் வைத்தாற்போல் இருக்கும். திருமாலும் பூக்கள் நிறைந்த மகுடத்தைச் சூடியுள்ளார்” என்று வால்மீகி சிலேடையாகக் கூறியுள்ளார்.

இவ்விதம் பூக்கள் பூக்கத் தொடங்கும் இளவேனில் காலத்தைத்தான் வசந்தகாலம் என்று நம் முன்னோர்கள் வரவேற்றனர். இவ்வகையில் வசந்த காலத் தொடக்கமாகிய சித்திரையில் புத்தாண்டும் மலர்கிறது. இந்தச் சித்திரைப் புத்தாண்டு, தமிழர்களுக்கு மாத்திரம் உரியது அல்ல, நாட்டின் பெரும்பாலான பகுதியினருக்கும் சித்திரை முதல் நாளே புத்தாண்டு. ஆயினும் சூரிய நாட்காட்டி, சந்திர நாட்காட்டி ஆகிய இருவேறுபட்ட நாட்காட்டிகளின் அடிப்படையில் புத்தாண்டு பிறக்கும் தினம் மாறுபடுகிறது.

சூரிய நாட்காட்டியைப் பின்பற்றும் தமிழகம் உள்ளிட்ட பகுதிகளில், சித்திரை மாதத்தின் முதல் நாளன்று, பெரும்பாலும் ஆங்கில மாதம் ஏப்ரல் 14ஆம் தேதி, புத்தாண்டு பிறக்கிறது. தமிழர்களால் “புத்தாண்டு” கொண்டாடப்படும் இதே தேதியில் கேரளத்தில் சித்திரை விஷு என்ற பெயரில் புத்தாண்டு தினம் கொண்டாடப்படுகிறது.

மேலும், பஞ்சாப், ஹரியாணாவில் பைசாகி என்ற பெயரிலும், ஜம்மு, ஹிமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் மேஷ சங்கராந்தி என்ற பெயரிலும், கர்நாடக மாநிலத்தில் துளு பேசும் பகுதிகளில் பிஷு பர்ப என்ற பெயரிலும், பிகாரில் மைதிலி மொழி பேசும் பகுதிகளில் ஜுயிர் சீத்தல் என்றும், ஒடிஷாவில் பனா சங்கராந்தி என்றும், வங்காளத்தில் பெஹ்லா பைசாக் என்றும், அஸ்ஸாமில் போஹாக் பிஹு என்ற பெயரிலும் இதே நாளன்று புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.

சந்திர நாட்காட்டியைப் பின்பற்றும் மாநிலங்களில், நமது தமிழ் மாதத்தின் பங்குனி யின்போதே சித்திரைக்கு நிகரான சைத்ர மாதம் தொடங்கிவிடுகிறது. அதற்கேற்ப அப்பகுதிகளில் புத்தாண்டு தினம் மாறுபடுகிறது. இவற்றில் ஆந்திரம், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் உகாதி என்ற பெயரிலும், கர்நாடக மாநிலத்தில் யுகாதி என்றும், மகாராஷ்டிரம், கோவா ஆகிய மாநிலங்களில் குடி படுவா என்றும், உத்தரப்பிரதேசத்தின் பல பகுதிகள், மத்தியப்பிரதேசம், பிகார், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் சைத்ர நவ்வர்ஷ என்றும், ஜார்க்கண்டில் சர்ஹுல் என்றும், காஷ்மீரில் நவ்ரே என்றும், சிந்தி மொழி பேசுபவர்களால் சேத்தி சந்த் என்ற பெயரிலும் சித்திரை மாதத்தில் புத்தாண்டு தினம் கொண்டாடப்படுகிறது.

ஆண்டின் தொடக்கமான சித்திரை மாதத்தை மிகவும் தெய்வீகமானதாகப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. சித்திரை மாதம் முதல்நாளன்றுதான் பிரும்மா இந்த உலகைப் படைத்தாராம். இதேபோல் சித்திரை மாதம் முதல்நாளன்றுதான் அகத்திய முனிவருக்கு சிவபெருமான், ரிஷப வாகனத்தில் வீற்றிருந்தபடி உமையம்மை உடனான தமது திருமணக் காட்சியைக் காண்பித்து அருளினாராம். உயிரினங்கள் செய்யும் நன்மை, தீமைகளைக் கணக்கெடுக்கும் சித்திரகுப்தனை சித்திரை மாதம் சித்திரை நட்சத்திர தினத்தன்றுதான் சிவபெருமான் தோற்றுவித்தாராம். சித்திரை மாதம் சுக்லபட்ச அஷ்டமி திதியில் அம்பிகை அவதரித்ததாக தேவி பாகவதம் கூறுகிறது.

சித்திரை மாதத்தில் வரும் அட்சய திருதியை, பொன் உள்ளிட்ட பொருட்களை வாங்கவும், தானம் வழங்கவும், பிற நற்செயல்களைப் புரியவும் உகந்த நாளாக மதிக்கப்படுகிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட பல்வேறு தொன்மை வாய்ந்த ஆலயங்களில் சித்திரை மாதத்தில்தான் பிரும்மோத்ஸவம் நடைபெறுகிறது. இத்தனைத் தெய்வீகச் சிறப்புகள் வாய்ந்திருப்பதால்தான் சித்திரை முதல்நாள் புத்தாண்டு தினத்தன்று, கோவில்களில் புத்தாண்டுப் பஞ்சாங்கம் படிக்கப்படுகிறது.

வசந்தகாலத்தில் பகலிரவுச் சமநாளை ஒட்டித் தொடங்குவது அல்லவா சித்திரைப் புத்தாண்டு! அதற்கேற்ப வாழ்வில் எது நடந்தாலும் சமநிலையில் அதனை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தத்தான் புத்தாண்டு தினத்தில் அறுசுவையும் கொண்ட பச்சடி பரிமாறப்படுகிறது. இனிப்புக்கு வெல்லம், கசப்புக்கு வேப்பம்பூ, காரத்துக்கு மிளகாய்வற்றல், உவர்ப்புக்கு உப்பு, புளிப்பு மற்றும் துவர்ப்புக்கு மாங்காய் என அறுசுவையும் கலந்து இருக்கும் பச்சடியைச் சுவைப்பதுபோல் வாழ்க்கையின் அனைத்து அனுபவங்களையும் சமநிலையில் நுகர்வோம். அதேநேரத்தில், சூரிய ஒளி மிகுந்திருக்கும் இளவேனிலில் புத்தாண்டு தொடங்குவதை மனத்தில் நிறுத்தி, இறை நம்பிக்கை ஒளியோடு இனிய செயல்களை ஆற்றுவோம்!.

அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

– **தமிழினி**



# அக்கரகாரம் மூலிகைச்செடியின் மருத்துவ நன்மைகள்

அக்கரம் என அழைக்கப்படும் அக்கரகாரம் மூலிகைச்செடி, கருமண் நிலங்களில் நன்கு வளரும், இளம் பச்சை நிறத்தில் பெரிய இலைகளைக் கொண்ட இந்தச் செடிகளின் மலர்கள், இள மஞ்சள் வண்ணத்தில் சிவப்பு நிறம் கலந்து காணப்படும். அதிக கிளை வேர்களைக் கொண்டு விளங்கும் அக்கர காரத்தின் வேர்களே, மிக்க மருத்துவப் பலன்கள் கொண்டவை.

தமிழகத்தில் அரிதாகக் காணப்படும் அக்கரகாரம், வட மாநில மலைப் பிரதேசங்களில் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. மருத்துவ நன்மை மிக்க அக்கரகாரத்தின் வேர்கள், உடலில் ஏற்படும் வாத வியாதிகளைப் போக்குவதிலும், நரம்புத் தளர்ச்சி பாதிப்பால் ஏற்படும் காக்கா வலிப்பு போன்ற வியாதிகளைத் தீர்த்து, மூளையின் இயக்க ஆற்றலை மேம்படுத்தும் சக்தியும் மிக்கது.

உமிழ் நீரைப் பெருக்கி, தொண்டையில் ஏற்படும் உள் நாக்கு பாதிப்பை சரியாக்கும். அக்கரகார வேரை வெறுமனே நாவில் இட்டு சுவைக்க, உதடு, நாக்கில், விறுவிறுப்பும், சிறு எரிச்சலும் உண்டாக்கும் தன்மை படைத்தது. அக்கரகாரம் வேரில் இருந்து எடுக்கப்படும் "பைரித்திரின் ஆயில்" பல்வேறு மருத்துவப் பலன்கள் கொண்ட மருந்துகளில், சேர்க்கப்படுகிறது.

**மருத்துவ நன்மைகள்**

* சிலருக்கு உள்நாக்கு வளர்ந்து, பேச முடியாமல் தொண்டை கட்டிக்கொண்டு வலிக்கும். இவர்கள் எல்லாம், சிறு அக்கரகார வேர்த் துண்டை, வாயில் இட்டுக் கொண்டு, உமிழ்நீரை விழுங்கி வர, தொண்டை உள்நாக்கு பாதிப்பு, குரல் கம்முவது, தாகமெடுப்பது போன்ற பாதிப்புகள் விலகும்.

* சிறிய அளவு அக்கரகாரத்தை சற்றே அரைத்து, ஒரு பாத்திரத்தில் இட்டு, ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு, நன்கு கொதிக்க வைத்து, கால் லிட்டர் அளவில் தண்ணீர் வற்றியவுடன், எடுத்து ஆற வைத்து, தினமும், அதில் சிறிதளவு வாயில் இட்டு அதக்கிக் கொண்டு, சற்று நேரம் வைத்திருந்து கொப்புளித்து உமிழவும். இதுபோன்று, தினமும் இரண்டு மூன்று முறைகள் வீதம், மூன்று நாட்கள் கொப்புளித்து வர, வாயில் உண்டான புண்கள், தொண்டைப் புண், பல் வலி மற்றும் பல் ஆடுதல் போன்ற பாதிப்புகள் விலகி விடும். மேலும், பற்களில் ஏற்படும் சொத்தை மற்றும் புழுத்தொல்லை பாதிப்பும் நீங்கிவிடும்.

* அக்கரகார வேர்களை குழித்தைல முறைப்படி காய்ச்சி, தைலம் எடுத்து, அந்தத் தைலத்தை உடலில் தொடுதல் உணர்வுகள் இல்லாமல் இருக்கும் இடங்களில் தினசரி மெதுவாக தடவி வர, விரைவில் அந்த இடங்களில், தொடுதலின் உணர்வை உணர முடியும். உடல் தளர்வையும் போக்கும்.

* அக்கிரகார சூரணத்துடன் இந்துப்பு கலந்து, புளித்த நீர் அல்லது எலுமிச்சை சாறு விட்டு நன்கு மையாக அரைத்து, அதைத் தனியே எடுத்து வைத்துக் கொண்டு, உள் நாக்கில் தடவி வர, உள் நாக்கில் ஏற்பட்ட தொற்று வியாதி பாதிப்புகளால் ஏற்பட்ட புண்களால் தொண்டைக் கட்டி பேச முடியாமல், தண்ணீர் பருக முடியாமல், உணவு உண்ண முடியாமல், உடல் மன வேதனை அடைந்து வந்தவர்கள், அந்த பாதிப்புகள் யாவும் விரைவில் நீங்கி, அதன் பின்னர் நலமுடன் பேசவும், உணவு உண்ணவும் முடியும்.

* திடீரென மயங்கி விழுந்து, பற்கள் கட்டிக் கொண்டவர்களுக்கு, அக்கிரகார சூரணத்தை, மூக்கில் வலுவாக உட்செலுத்த, உடனே மயக்கம் விலகி, பற்கள் கட்டிக் கொள்ளும் பாதிப்பு விலகி, சுய நினைவை அடைவர். காக்கா வலிப்பு வியாதியும் விலகும்.

* மனிதர்களுக்கு நரம்புத் தளர்ச்சி பாதிப்பால் ஏற்படும் காக்கா வலிப்பு வியாதி, உடலுக்கு மிகவும் அதிக பாதிப்புகள் தருவதும், மனதுக்கு வேதனைகள் தருவதுமாக விளங்குகிறது. இந்த பாதிப்புகளைத் தடுக்க, அக்கரகாரத்துடன் துணை மருந்துகள் சேர்த்து செய்யும் சூரணம் ஒரு தீர்வாக அமையும்

* அக்கிரகாரம், குங்குமப்பூ, ஜாதிக்காய், சந்தனம், கிராம்பு, சுக்கு, திப்பிலி மற்றும் அபின் சேர்த்து, நன்கு இடித்து, தூளாக்கி, பனங்கற்கண்டு சேர்த்து பத்திரப்படுத்தி, வைத்துக் கொண்டு, அந்த சூரணத்தில் சிறிதளவு எடுத்து தினமும் இரு வேளை சாப்பிட்டு வர, வயிற்று வியாதிகள் மற்றும் நரம்புத் தளர்ச்சி பாதிப்புகள் விலகி, உடல் வலுவாகும்.

* அக்கிரகாரம், அதி மதுரம், சுக்கு மற்றும் சித்தரத்தை சேர்த்து அரைத்து, பொடியாக்கி, சிறிது எடுத்து பாலில் கலந்து, அதில், அரைத்து பாலில் வேகவைத்த பேரிச்சம் பழ விழுதைக் கலந்து, தேன் சேர்த்து, தனியே வைத்துக் கொள்ளவும். கடும் ஜுரம் மற்றும் குளிர் ஜுரம் உள்ள நேரங்களில், உடலில் உள்ள நீர்ச்சத்து எல்லாம் ஆவியாகி விடும். இதனால் உடலில் நீர்ச்சத்து இன்மையால், நாக்கில் ஏற்படும் வறட்சிக்கு, இந்தத் தேன் விழுதை சிறிதளவு நாக்கில் தடவ, நாவில் ஏற்பட்ட வறட்சி விலகி, உமிழ்நீர் சீராக சுரக்க ஆரம்பிக்கும், ஜுரத்தின் வேகமும் மட்டுப்படும்.

* நா வறட்சி ஏற்படும் சமயங்களில் சிலருக்கு, மலச்சிக்கல் ஏற்படக்கூடும், அதற்கு தீர்வாக, இந்த அக்கரகார தேன் மருந்தில், கடுக்காய் சூரணமும் சேர்த்து, மேற்கண்ட முறையில் தயார் செய்து, பயன்படுத்த, நாவறட்சி பாதிப்புகள் நீங்கி, மலச்சிக்கலும் சரியாகி விடும்.

* உடலின் இயக்கத்துக்கும், மனதின் ஆற்றலுக்கும் கட்டுப்பாட்டு மையமாக விளங்கும் மூளை, சரியாக இயங்கா விட்டால், சரியாக சிந்திக்க முடியாது, ஞாபக மறதி அதிகரிக்கும், உடலில் சோர்வு உண்டாகும், இது போன்ற நிலைகளில், பாதிப்பைக் களைந்து, மூளையின் ஆற்றல் சீராக, அக்கரகார வல்லாரை மருந்து உறுதுணை புரியும். அக்கரகாரம், வல்லாரை மற்றும் பூனைகாலி இவை மூன்றையும் சமமாக கலந்து தினமும், இருவேளை பாலில் கலந்து சாப்பிட்டு வர, மூளையின் செயல்பாட்டை சீராக்கும் ஹார்மோன் சுரப்பை அதிகரித்து, சிந்திக்கும் திறனை மேம்படுத்தும். ஞாபக சக்தி மீண்டும் இயல்பாகும்.

* உடலில் மெட்டபாலிசம் எனப்படும் வளர்சிதை மாற்றம் அதிகரித்து, கெட்ட செல்கள் வெளியேறி, உடலில் புதிய செல்கள் உருவாகும். இதன் மூலம், உடலின் வனப்பும் பொலிவும் அதிகரித்து, மனதில் உற்சாகம் தோன்றும், செய்யும் செயல்களில் ஈடுபாடு ஏற்படும்.

* அக்கிரகாரம், அதி மதுரம் மற்றும் கரிசலாங்கண்ணி இம்மூன்று மருந்துகளையும் தனித்தனியே இடித்துத் தூளாக்கி, பின்னர் அவற்றை சிறிதளவு எடுத்து, தேனில் குழைத்து காலை வேளைகளில் தினமும் சாப்பிட்டு வர, குரலில் இனிமை கூடும். அக்கிரகார வேரைப் போலவே, அக்கிரகாரச் செடியின் தண்டின் பட்டையும் மருத்துவ குணங்கள் மிக்கதாகும்.

* அக்கிரகாரப் பட்டையை சூரணம் செய்து, அதில் சிறிதளவு எடுத்து அரை லிட்டர் நீரில் கலந்து, சுண்டக் காய்ச்சி, மூன்றில் ஒரு பங்கு அளவில் வந்ததும், இறக்கி ஆற வைத்து, பருகி வர, அதிக தாகம், நாக்கு வறண்டு போவது, தலைவலி போன்ற பாதிப்புகள் விலகும்.

* அக்கரகாரப் பட்டை சூரணத்தை தேனில் கலந்தும் அல்லது பனங்கற்கண்டு சேர்த்தும் தினமும் இரு வேளை சாப்பிட்டு வரலாம். மேற்கண்ட பாதிப்புகள் யாவும் சரியாகி விடும்.

– D. பாமா

# யார் யாருக்கெல்லாம் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும்?

## சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பட்டியல்






நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், மீனவ மகளிர், கட்டுமான தொழிலில் பணிபுரியும் மகளிர், சொற்ப ஊதியங்களில் வேலை செய்திடும் மகளிர், இல்லங்களில் பணியாற்றும் மகளிர் என ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகள் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் பயன்பெறுவார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார்.

அண்மையில் தமிழ்நாடு பட்ஜெட்டில் தகுதிவாய்ந்த பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து 'தகுதிவாய்ந்த' என்ற வார்த்தைக்கான காரணம் குறித்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வந்தனர்.

இதன் பின்னர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியாகும் என்று அமைச்சர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

**மு.க.ஸ்டாலின் விளக்கம்**

அதில், தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத பல உன்னதமான திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டின் மகத்தான திட்டமான மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. பெண்களுக்கான சமூக பொருளாதாரத்தை மீட்க எவ்வளவோ தலைவர்கள் வந்தாலும் பெரியாரின் சுயமரியாதை இயக்கமே பெண் விடுதலைக்கு பாதை அமைத்தது.

**பெண்களின் விலைமதிப்பில்லா உழைப்பு**

கிராம பொருளாதாரத்தை சுமப்பதாக பெண்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்க முடியாது. ஒரு ஆணுடைய வெற்றிக்காகவும், குழந்தைகளின் கல்வி, சமூகத்திற்காகவும் எத்தனை மணி நேரங்கள் அவர்கள் உழைத்திருப்பார்கள். அவர்களுக்கான ஊதியம்தான் இது. ஆண்கள் அங்கீகரித்தால் பெண்களுக்கான சமூக உரிமை வழங்கிடும் நிலை உருவாகும் என இந்த அரசு நம்புகிறது. பல்வேறு வகைகளில்

விலைமதிப்பில்லாத உழைப்பை வழங்கும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள்.

**யாரெல்லாம் பயன்பெறுவார்கள்**

நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலை கடற்கரை விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமான தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகளில் சொற்ப ஊதியங்களில் வேலை செய்திடும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணியாற்றும் மகளிர் என பலரும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் பயன்பெறுவார்கள். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். மகளிர் உரிமைத் தொகை வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

**ஏறத்தாழ ஒரு கோடி மகளிர்**

இந்த திட்டத்திற்கான முதல் நொக்கம் பெண்களுக்கு அங்கீகாரம் கொடுப்பது தான். இரண்டாவது நோக்கம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். இதனை செய்ய முடியுமா, நிதி இருக்குமா என்று கேள்வி எழுப்பி, அச்சத்தை வெளிப்படுத்தி வந்தவர்களுக்கு பதிலளிக்கும் வகையில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக நீதி திட்டங்களிலேயே மாபெரும் முன்னெடுப்பாக வரலாற்றில் விளங்க மகத்தான மகளிர் உரிமை தொகை வழங்கக் கூடிய திட்டம் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அமைந்திடும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

**ரூ.7000 கோடி**

சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும் பெண் இருக்கிறார். தாய் மனைவி சகோதரி ஆணுக்கு பின்னால் பெண் இருக்கிறார். நீதிக்கட்சி முதலே பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மகளிர் உரிமை தொகை திட்டத்திற்காக 7000 கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டதை தொடர்ந்து, யார் யாருக்கெல்லாம் கிடைக்கும் கிடைக்காது என எல்லோரும் மனக்கணக்கு போட்டுக் கொண்டு வருகிறார்கள் என கூறினார்.

**வங்கிக் கணக்கில் பணம்**

மேலும், உரிமை தொகை திட்டம் இரண்டு நோக்கங்களை கொண்டது என்றும், இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார். குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கவே மகளிர் உரிமை திட்டம் என்றும், பெண்களின் வங்கி கணக்கிற்கே மகளிர் உரிமைதொகை செலுத்தப்படும் எனவும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

– M. திலிப்குமார்




பணம் காய்க்கும் மரம்!

# அழிவின் விளிம்பில் இலுப்பை மரம்!



இலுப்பை மரம் மேகக்கூட்டங்களை தருவித்து மழையை வரவழைக்கும் குணம்கொண்டது. உலகில் முதலில் மதிக்கப்பட வேண்டியது மரங்கள்தான். மனிதன் கொடுக்கும் இடர்பாடுகளை எல்லாம் சுத்தப்படுத்தி மழையைக் கொண்டு வரும் அற்புத படைப்பு இலுப்பை மரம்.

இலுப்பையின் தாயகம் தமிழகம் தவிர நேப்பாளம், இலங்கை மற்றும் மியான்மரிலும் காணப்படுகிறது. ஜார்கண்ட், குஜராத், மத்தியபிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா, கேரளா மற்றும் தமிழ்நாட்டிலும் உள்ளது. இது சப்போட்டா மரத்தின் வகையை சேர்ந்தது.

தமிழகத்தில் 1950 ஆம் ஆண்டு வாக்கில் 30,000 மரங்களுக்கும் அதிகமாக இருந்தன. ஆனால் 2015 ஆம் ஆண்டு கணக்கின்படி 10,000 மரங்களுக்கும் குறைவாக உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

திருஇரும்பைமாகாளம், திருப்பழமண்ணிப்படிக்கரை (மயிலாடுதுறை), திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு), திருவனந்தபுரம் கோவில்களில் இலுப்பை மரம் தல விருட்சமாக உள்ளது. இதன் விதையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இலுப்ப எண்ணெய் கோவில்களில் விளக்கேற்றப் பயன்படுத்தப்பட்டது. இந்த எண்ணெய்யில் விளக்கெரியும்போது, மனதுக்கு இதமான ஒரு வாசனை காற்றில் பரவும். நின்று நிதானமாக எரியும் என்பதால் தீவட்டிகளிலும் இந்த எண்ணெய்யே பயன்படுத்தப்பட்டது. பல மன்னர்கள், எண்ணெய்க்காக இலுப்பைத் தோப்புகளை உருவாக்கி, கோயில்களுக்கு மானியமாக எழுதி வைத்தார்கள். இதனால் கோவில்களில் தோப்பாக வளர்க்கப்பட்டன.

இலுப்பை ஒரு வெப்ப மண்டல தாவரம். வறண்ட நிலங்களிலும் எளிதாக வளரக்கூடியாது. இலுப்பையின் ஆயுட்காலம் நானூறு ஆண்டுகளுக்கு மேல். சுமார் அறுபது அடிக்கும் மேல் வளரக்கூடியது.

இலுப்பை மரம் அதிகமான மருத்துவ குணமுடைய தாவரம். இதன் இலை, பூ, விதை, பட்டை, எண்ணெய், புண்ணாக்கு ஆகிய அனைத்தும் சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் மருத்துவத்திற்கான பயன்பாட்டில் உள்ளது. இது குடைபோல; பரந்து விரிந்து வளர்ந்து நிழல் தருவதால், சாலையோரங்கள், கோவில்கள், கிராமப்புறங்கள், காப்புக் காடுகளில் தோப்புகளாக வளர்க்கப்பட்டன.

அதில் பருந்து, கழுகு, காகம், கிளி உள்ளிட்ட பறவைகள் கூடுகட்டி வாழ்ந்தன. அதிகாலை, மாலை நேரங்களில் பறவைகளின் ரீங்கார சப்தங்கள் கேட்க இனிமையாக இருக்கும்.

வெளியூர் செல்பவர்களுக்கு இளைப்பாறவும், பறவைகளின் தங்குமிடமாகவும் விளங்கிய இலுப்பை மரங்கள் தற்போது அழிந்து வருகின்றன. இதன் பழங்களை சாப்பிட்டு வாழ்ந்த வவ்வால், பச்சைக்கிளி உள்ளிட்ட இனங்களும் அழிந்து வருகின்றன. இதன் பருவகாலம் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை. முளைத்த நாளிலிருந்து பத்து வருடங்களுக்கு பின்னர்தான் பலன் தரும்.

“ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை” என்பது பழமொழி.

ஒரு வருடத்திற்கு இருநூறு கிலோவிலிருந்து முன்னூறு கிலோ பூவும், இருபது முதல் இருநூறு கிலோ வரை இலுப்பை விதையும் கிடைக்கும். ஒரு கிலோ விதையிலிருந்து முன்னூறு மில்லி லிட்டர் எண்ணெய் எடுக்கலாம்.

ஒரு டன் பூவிலிருந்து எழுநூறு கிலோ சர்க்கரையும், நானூறு கிலோ ஆல்ககாலும் தயாரிக்கலாம். இலுப்பை ஆல்ககால் (சாராயம்) ஒரு மாற்று எரிபொருளாக பயன்படக்கூடியது. இலுப்பை எண்ணெய் ஒரு வலி நிவாரணி, சமையலுக்கும் இது பயன்படுகிறது. இலுப்பைப்



புண்ணாக்கு குளிர்ச்சியைத் தரும் என்பதால், தமிழர்கள் மரபு வழியாக அரைத்து தலையில் தேய்த்து குளியலுக்கு பயன்படுத்தினர்.

இது தவிர பாம்பு விஷம், வாத நோய், சக்கரை வியாதி, சளி, இருமல் மூலநோய், வயிற்றுப்புண், சுவாசக்கோளாறு, காயம் ஆகியவற்றிற்கு மருந்தாக பயன்படுகிறது. இலுப்பைப் பூ ஊறுகாய் காச நோய்க்கு அருமருந்தாகும்.

இலுப்பைப்பூவை அரைத்து பாலில் கலந்து அருந்தினால் இளைப்பு நீங்கும். காய்ந்த இலுப்பைப்பூவை வதக்கி வீக்கங்களுக்கு ஒற்றடமிட்டு வந்தால் வீக்கம் மறையும்.

இலுப்பைப்பூவைக் காயவைத்து இடித்து வெல்லத்துடன் சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு உண்டான மாதவிலக்குக் கோளாறுகள், வெள்ளைப்படுதல் நீங்கும்.

இலுப்பைக் காயை கீறினால் பால் வெளிப்படும். அந்த பாலை உடலில் தோன்றும் வெண் படலங்களின் மீது தடவினால் வெண்படலம் விரைவில் குணமாகும்.

இலுப்பைப்பழம் நல்ல இனிப்புச் சுவை உடையது. மலச்சிக்கலைப் போக்கும் தன்மை கொண்டது.

விறகாக மட்டுமின்றி அறைக்கலன்கள், மரச்சாமான்கள், சமையல் பாத்திரங்கள், வண்டிச்சக்கரங்கள், மரப்பெட்டிகள் போன்றவற்றின் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உப்புநீரை தாங்குவதால் இம்மரம் படகுகள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

**வணிகரீதியாக ஒரு ஏக்கருக்கு சுமார் இருநூறு இலுப்பை மரங்கள் வரை நட்டு, ஆண்டொன்றுக்கு ஆயிரத்தி ஐநூறு லிட்டர் எண்ணெய் எடுத்தால் அதன் மூலமாக மூன்று லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கலாம். இது தவிர பூ, பட்டை, சர்க்கரை, புண்ணாக்கு, சாராயம், சிகைக்காய் ஆகிய அனைத்துமே பணம்தான்.**

**ஒரு கண அடி மரம் ஆயிரம் ரூபாய் வரை விலை கொண்டது. அறுபது ஆண்டுகள் கழித்து ஒரு மரம் சுமார் ஐந்து லட்சத்திற்கு மேல் மதிப்புடையதாகிறது. இதை ஒரு பணம் காய்க்கும் மரம் என்று கூறினால் அது மிகையாகாது.** வவ்வாலுக்கு மிகவும் பிடித்தமான உணவு இலுப்பை பழங்கள்தான். இலுப்பையின் அழிவு வவ்வாலின் அழிவு. வவ்வாலின் அழிவு கொசுவின் வளர்ச்சி. கொசுக்களின் வளர்ச்சி வியாதிகளின் வளர்ச்சி.

“மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்” இந்த வாசகத்தை பல இடங்களில் பார்த்திருப்போம். சிலர் மரக்கன்றுகளை நட்டு பாதுகாத்து வளர்த்து வருகிறார்கள். சிலர் மரம் நட்டு போட்டொ எடுப்பதோடு முடிந்துவிடுகிறது.

எனவே, மரம் நடும் நல்ல உள்ளங்களுக்கு ஒரு வேண்டுகோள் ‘மரம் நடுவதோடு இல்லாமல், அந்த மரம் இயற்கை சூழல், ஆடு, மாடு போன்ற வளர்ப்பு பிராணிகளிடமிருந்து கண்காணித்து பாதுகாத்து வளர்ந்து வந்தால் நன்றாக இருக்கு.

“மரம் நிழல் தரும்! மரம் மழை தரும்!” என்றெல்லாம் சொல்வது நன்றாக இருக்கிறது. அதோடு மரம் காய் தரும்! மரம் பூ தரும்! மரம் கனி தரும் என்ற வரியை எல்லா வகையிலும் மறைத்துவிட்டனர். மனிதன் மட்டுமின்றி ஏராளமான பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்ற பல்வேறு உயிரினங்களுக்கும் உணவாகும். இதைப் போன்ற மரங்களை ஏன் மரம் நடும் அர்வலர்கள் நட்டு பராமரிக்கக்கூடாது.



இன்றைக்கு சாலையோரங்களில் ஏற்கனவே இருந்த புளியமரங்களை அகற்றப்பட்டிருப்பதை பல இடங்களில் பார்த்திருப்போம். அதற்கு மாற்றாக வேறு ஒரு மரம் நடுவது மிக மிக நன்று. அதிலும் வளர்க்கப்படும் மரங்களில் காய், பழம் ஏன் தேனீ உட்காரகூட பூ பூக்காத மரமாகத்தான் நடப்படுகிறது. அதற்கான உள்நோக்கம் என்ன? அதற்கு மாற்றாக இலுப்பை போன்ற மரங்களை நட்டு வைத்தால் நன்றாக இருக்கும்.

உள்நாட்டு மரமான இலுப்பையை நட்டுப் பராமரிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலுப்பையை அழிவிலிருந்து மீட்போம்! சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியம் காப்போம்!.

**– நா வீ சிவசங்கர்**










**இந்தியாவில் முழுவதும் மொத்தம் 3167 புலிகள் உள்ளதாக பிரதமர் மோடி அறிவித்தார். 2018-ஆம் ஆண்டு 2967-ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை தற்போது 3167-ஆக அதிகரித்துள்ளது.**

Printed by **NV SIVASHANKAR** and Published by **NV SIVASHANKAR** on behalf of PENA KURAL, Tamil Monthly and Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: **RATHIKA S.**


V.AYYANAR
9884166636
NO.3/885,PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097
DEEPSHIKA AUTO WORKS
ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE
email: deepshikaautoworks@gmail.com


BM
Electrical, Plumbing
&
Air Conditioner Work
B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097

**PENA KURAL,** Tamil Monthly, April 2023
Registered with REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA, **R.Dis.No.: 939/2022** Title Code: TNTAM24489

